# வெற்றிமுனை


பன்னாட்டுத் தமிழியல் மேம்பாட்டு மாத இதழ்

தனி இதழ் : ரூ. 30/-    ISSN - 2394 - 2428

அன்பு நிறைந்த அறிவைத் தேடி ஒரு பயணம்

*மலர் - 09*    *மார்ச் - 2018*    *இதழ் - 04*



*சிறப்பாசிரியர்*
நீதியரசர் ச. மோகன்
(உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர்)

*முதன்மை ஆசிரியர்*
நீதிபதி மூ. புகழேந்தி

*ஆசிரியர்*
முனைவர் மோ. பாட்டழகன்
93804 17307

*பொறுப்பாசிரியர்*
பேரா. முனைவர் ச. விஜயலட்சுமி

*துணை ஆசிரியர்கள்*
பேராசிரியர் சு. முத்தையா
கவிஞர் திருவைபாபு
இர. மகேந்திரன்
கவிஞர் உமர் கத்தாபு
திருமதி. அனிதா பரமசிவம்
(எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்
கவிஞர் செந்தாமரைக்கொடி

*அமெரிக்கா - பொறுப்பாசிரியர்*
எழுத்தாளர் ஜெ. புவனேஷ்வரி

*ஆலோசனைக் குழு*

முனைவர் மருதூர் அரங்கராசன்
முனைவர் இனியன் கோவிந்தராஜீ, கரூர்
முனைவர் சி. கோமளவல்லி
எம். கோவிந்தன்
பேராசிரியர் அரகங். சீனிவாசன்
பேரா. திருமதி. சோதிலட்சுமி
இரா. கௌதமராஜன்
திருமதி. விசயலட்சுமி மாசிலாமணி
முனைவர் மோ.ஐ. மகேஸ்வரி
முனைவர் ஈ. யுவராணி
சி. சதீஷ்
திருமதி. பூமாவதி இராசேந்திரன்



மின்னஞ்சல் மூலமும்
படைப்புகளை அனுப்பலாம்
vasantha.tha399@gmail.com

**இதழின் அனைத்துத் தொடர்புகளுக்கும் படைப்புகள் மற்றும் கருத்துரைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர் 'வெற்றிமுனை'

26, குறுக்குத் தெரு, ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

93804 17307

புலவர், முத்தமிழ்க் கவிஞர், முனைவர்

ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்களின்

# "நூலகத்தால் உயர்ந்தேன்"

வாழ்க்கை வரலாற்று ஆவணம்.

எழுபத்தைந்து அகவை நிரம்பிய அவர்தம் வாழ்நாளில் சந்தித்த பலநூறு அறிஞர்களைப் பதிவு செய்து வைத்துள்ளார். இந்நூல் ஒரு குட்டி இலக்கிய வரலாறு எனலாம்.

***1096 பக்கம் கொண்ட இந்நூல் விலை ரூ. 1200/ சலுகை விலை ரூ. 800/- மட்டும். நூல் வேண்டுவோர் :***

**தொடர்புக்கு :**

**முனைவர் மோ. பாட்டழகன்,**

**வசந்தா பதிப்பகம்,**

26, குறுக்குத் தெரு, சோசப்பு குடியிருப்பு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
பேசி : 044 - 22530954, 225333667, 93804 17307

| | | | |
|---|---|---|---|
| பெற்றோரைப் | போற்றிடுவோம் | பெருமையுடன் | வாழ்ந்திடுவோம் |
| கற்றோரை | நாடிடுவோம் | கலையெல்லாம் | மாந்திடுவோம் |
| வெற்றிமுனை | எய்திடுவோம் | விண்தொட்டுப் | பார்த்திடுவோம் |
| குற்றமில்லா | வாழ்வாலே | குவலயத்தைக் | காத்திடுவோம். |

**- நீதிபதி மூ. புகழேந்தி**

# தான்தோன்றித் தனமாக...



*மனிதர்களாகிய நாம் ஆறறிவுப் பிறவிகள்!*

*ஆனால்... நம்மிடம் எவ்வளவு குறைபாடுகள்!*

*அப்பப்பா! சொல்லியும் மாளவில்லை: எழுதியும் மாளவில்லை.*

*தோண்டத்தோண்ட அவை வெளியே வந்த வண்ணமே உள்ளன என்பதை நான் எழுதும் கட்டுரையைத் தொடர்ந்துப் படித்து வருபவர்களால் உணர முடியும்: ஏற்கவும் முடியும்.*

*பெற்றோர்கள் தம் பிள்ளைகள் தாங்கள் சொல்வதைக் கேட்காமல் அவர்கள் விருப்பத் அதிற்கு செயல்படுவதை விரும்புவ தில்லை. ஏனென்றால் பிள்ளை களுக்கு பெற்றோர்களே சிறந்த வழிகாட்டிகள். பிறப்பிலிருந்து பிள்ளையின் நலனையே கருத்தில் கொண்டு தங்கள் நலனை மறந்து வாழ்கின்ற பெருங்குணம் உள்ளவர்கள் பெற்றோர். பிள்ளைகளின் விருப்பமறிந்து உணவூட்டுவது உடை உடுத்துவது விளையாட்டுப் பொருட் களைக்கூட வாங்கித் தருவது போன்ற அனைத்தையும் செய்து கொடுப்பதைத் தங்கள் கடமை யாக மட்டும் கருதாமல் விருப்ப மாகக் கொண்டு வாழ்ந்து வரு வதை அனைவரும் உணர்வோம். இதற்கு எடுத்துக் காட்டாக நான் பள்ளி இறுதி ஆண்டில் படித்த ''அன்பு அறமாவது'' எப்படி என்ற பாடத்தை இப்போது நினைவு கூற விரும்புகின்றேன்.*

*தங்கள் நலத்தையே பேணி வந்த தம்பதியரிடையே குழந்தைச் செல்வம் என்ற மூன்றாவது உறவு வந்து விட்டபின் அவர் களுடைய உணர்வு பாசம் எல்லாம் அதனிடம் சென்று விடுகின்றது.*

*மூன்றாவது நபராகிய அதன் நண்பனிடம் அது விரிந்து பரவு*

கின்றது. அதனால் தங்கள் பிள்ளையைப் போன்றே அதன் நண்பனிடமும் அந்தப் பெற்றோர் நடந்து கொண்டு உறவைப் போற்றுகின்றனர். இது பிள்ளை களின் நலனில் பெற்றோர் எவ்வளவு பெருந்தன்மையுடன் நடந்து கொள்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டும். இதுவே தம்பதியரின் அறச்செயலாகும்.

அப்படிப்பட்டப் பெற்றோர் விரும்பாததை மகன் செய்தால் அது நன்மை தராது என்பதை பிள்ளைகள் உணர வேண்டும். பிள்ளைகள் ஈடுபடவுள்ள ஒன்றை பெற்றோர்கள் அதனால்தான் மறுக்கின்றனர் என்பதை அப் பிள்ளைகள் உணர வேண்டும். அவர்களுக்குத் தெரியும் அந்தச் செயலின் நன்மை தீமை குறித்து. மாறாக அது பிள்ளைகளுக்குத் துன்பத்தையோ தொந்தரவை யோ கொடுக்கும் என்பதால் பெற்றோர் அதை பிள்ளைகள் செய்வதை விரும்புவதில்லை. அதையும் மீறி பெற்றோர் வாக்கைப் பொருட்படுத்தாமல் அவர்கள் செயல்பட ஆரம்பிப்பது தான் தான்தோன்றித்தனமாகும். அதனால் பல இன்னல்களும் தொல்லைகளும் பிள்ளை களுக்கும் பெற்றோர்களுக்கும் ஏற்பட்டு அல்லலுறுவதை நாம் செய்தித்தாள்களின் மூலம் தினம் அறிகின்றோம்.

காதல் என்பது ஒரு ஆத்மார்த்த உணர்வு. அதை அவ்வளவு எளி தாகக் கைக்கொள்ளக் கூடாது. எந்தப் பெற்றோரும் அதை ஏற்பதில்லை. எனவேதான் பள்ளி கல்லூரிகளுக்குச் செல்லுகின்ற தங்கள் பிள்ளைகளைப் பெற்றோர் குறிப்பாகத் தாய்குலங்கள் காதல் கீதல் போன்ற விவகாரங்களில் விழுந்துடாதீங்க என்று எச்சரித்து அனுப்புவர். ஆனாலும் வயதுக் கோளாறைக் கட்டுப்படுத்த இய லாத சில இளசுகள் பெற்றோர் வாக்கையும் மீறி பிரச்சினைகளின் உச்சக் கட்டத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல், சமுதாயச் சிக்கல்களைப் பற்றிக் கவலைப் படாமல் காதல் வலையில் வீழ்ந்து விடுகின்றனர். சில பெண்கள் கட்டுப் பாட்டையும் மீறி ஆசைக்கிணங்கி சுமைதாங்கி களாகி அவர்களும் அல்லலுற்று பெற்றோரையும் கேவலப்படுத்தி சமுதாயத்தின் முன் கேலிப் பொருட்களாகி விடுகின்றனர். சமீபத்தில் நாம் அறிந்த செய்தி, அதாவது அஸ்வினி என்ற பெண் அழகேசன் என்ற பொருந்தாப் பண்பாடுடையோனுடன் பழகி காதலாகி, அவன் தவறான குணமறிந்துத் தாய் தடுக்க அதை ஏற்ற அப்பெண் விலக அவளை விட முடியாத வெறியால் கல்லூரி முன் அவளை வெட்டி சாய்த்த அவலத்தைக் கண்டோம். இது எதனால்? அப்பெண்ணின் தாய் சொல் மீறிய தான்தோன்றித் தனத்தால் என்றால் மிகையா காது.

நான் சந்தித்த வழக்குகளில் பல கற்பழிப்பு வழக்குகளும் உண்டு. கற்பழிப்பு என்றால் பெண்ணின் சம்மதம் இல்லாமல் வன்முறையாக நடக்கும் செயல். ஆனால் சில பெண்கள் காதல் என்ற உடலாசையில் விழுந்து விட்டு கற்பமாகி விடுகின்றனர். இந்த நிலையில் அதற்குக் காரண மான ஆண் அவளைத் திருமணம் செய்யாமல் நிராகரிக்கின்ற பொது அவளுக்குப் புத்தி வந்துவிடு கின்றது. எப்படியாவது அவனை மணந்து தன் வயிற்றிலிருக்கும் பிள்ளைக்கு அவனைத் தகப்பனாக உறுதிப்படுத்த வேண்டுமென்றும் தன் கற்பத்திற்கு அவனே காரண மென்றும் ஊரறியச் செய்ய வேண்டுமென்றும் அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டிய நிலைக்கு அவள் தள்ளப்படுகின்றாள். அப்போது அவளுக்குக் கிடைக்கும் வழி அவன் மீது கற்பழிப்பு வழக்குத் தாக்கல் செய்வதுதான். அந்த வழக்கு நிற்குமா என்றால் அது வினாக்குறியில் தொங்கும். இதெல்லாம் எதனால்? பருவ வயதில் தான்தோன்றித் தனமாகத் திரியும் அறிவற்ற செயலால் என்பதை அவர் அப்போதுதான் உணர்வார். அது கண் கெட்டப் பின் சூரிய நமஸ்காரம் என்ற கூற்றிற்கு எடுத்துக் காட்டாக அமையும்.

அதேபோல்தான் இளைஞர் களின் நிலையம் ஆகும். கூடா நட்பு கேடாய் விளையும் என்பதற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுகளை நாம் கூறலாம். எந்தப் பெற்றோரும் தன் மகனுக்கு மதுவருந்தும் பழக்கத்தையோ புகைப் பிடிக்கும் பழக்கத்தை யோ கற்றுத் தருவ தில்லை. ஆனால் கெட்டவர்களின் நடப்பால் இந்த இரண்டையும் கற்றுக் கொண்டு பெற்றோரின் பேச்சைக் கேட்பதில்லை. அதை என்னென்று சொல்வது? தான் தோன்றித்தனம் தானே!

பெரியவர்கள் மட்டுமென்ன? சிந்தித்தா பார்க்கின்றனர்? எவ்வளவுதான் தடுத்தாலும் மதுவருந்திவிட்டு குடும்பத்தை அழிப்பதையும் மனைவிகளையும் பிள்ளைகளையும் அடித்துத் துன்புறுத்துவதையும் இன்றும் நாம் காண்கின்றோம். இது எதனால்? தாம் சம்பாதிக்கின் றோம் என்ற தலைகனத்தால், குடும்பத்திற்குக் கட்டுப்படாத தான்தொன்றித்தனத்தால் என்றால் நம்மால் மறுக்க வியலாது.

இதயெல்லாம் மனதில் கொண்டு நல்ல வாழக்கை வாழ்வோரோடு நாமும் இணை வோமே!

மக்கள் நலம் நாடும்,

**நீதிபதி மூ.புகழேந்தி**

# குழந்தை இலக்கியத்தில் நாட்டுப்புறப் பாடல்கள்

**சா. முருகேசன்,**
எம்.ஏ, எம்.ஃபில்., எம்.எல். ஐ.சி,பி.எட்.,
முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்,
தமிழ்த்துறை, இசுலாமியா கல்லூரி
(தன்னாட்சி),
வாணியம்பாடி - 635 752.

**முன்னுரை :**

இயற்கை என்னும் வாழ்க்கை நடத்தும் மக்களின் களைப்பை போக்க பாடிய பாட்டுக்கள் நாட்டுப்புறப் பாடல்கள் என்பார். நாட்டுப்புறப் பாடல்கள் இலக்கிய இசைச் சோலைகள் என்பார். இசையருவி, இன்ப பற்று, இலக்கிய மணம் வீசும் செம்மைத் தமிழ் இலக்கிய களஞ்சியம். தனித்தமிழன் (கன்னி) கருவுலமாய் (பாதுகாப்பு) நல்லத் தமிழுக்குப் பெருமை சேர்க்கின்றன என்பதை அறிய முடிகிறது.

நாட்டுப்பாடல், நாடோடிப் பாடல், வாய்மொழிப் பாடல், கிராமப் பாடல், மக்கள் பாடல், ஏட்டில் எழுதாக் கவிதைப் பாடல், மலையருவி, தேன் னருவி, பூக்கள் வீசும் கவிதை என பல்வகை பெயர்களில் உள்ளன.

மண்ணின் மைந்தர் தம் மனக் கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று, உயிர்பெற்று, உலரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புறப் பாடல்கள் என்று நாட்டுப் புறவியல் பேராசிரியர் முனைவர் சு. சக்திவேல் கூறியுள்ளார். (சு. சக்திவேல் 28)

நாட்டுப்புறப் பாடல்கள் பல் வகை பிரிவுகளைக் கொண்டது என நாட்டுப்புறவியல் அறிஞர் கூறுகின்றனர். அதில் ஒன்றுதான் குழந்தை இலக்கியத்தில் பள்ளிப் பாடல்கள் (நாட்டுப் புறப் பாடல்கள்) ஆகும்.

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் குழந்தை பாடல் :**

உலகில் (பார்) ஈடு இணை யற்ற 16-செல்வங்களில் குழந்தைச் செல்வம் சிறந்த செல்வம் என்பார். குழந்தையின் மழலை பேசும் மொழி மான் போலத் துள்ளி மலர்ப்போல் சிரித்து, தேன் போலப் பேசிய பருவம் குழந்தைப் பருவம் என்பார். வள்ளுவர் குழந்தைகளுக்கு என

*மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில்,*

குல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்
(குறள் - 66)

*தன் குழந்தையின் மழலை மொழியின் அமுதத்தை அள்ளி அள்ளிப் பருகாதவர் இல்லை. குழல் இசை (குழந்தை பேசுதல்) இனிமையானது, யாழ் இசைத்து இன்பம் காண்பது போல் வள்ளுவரின் 66 குறள் எடுத்து இயம்புகின்றன.*

*தொல்காப்பியர் குழவி மருங்கினும் கிழவதாகும் (தொ-பொரு-பு-1030) என விவரித்துள்ளார். 96 வகை சிற்றிலக்கியத்தில் பிள்ளைத் தமிழ் தோன்ற வழிகாட்டியாக திகழ்கின்றன.*

*குழந்தையின் பெருமையைப் பாண்டியன் அறிவுடை நம்பி என்பவர் தன் பாடல் மூலம் விவரித்துள்ளார். இப்பாடல் புறநானூற்றில் அமைந்து உள்ளது.*

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே (புறம் - 188)

## குழந்தை இலக்கியத்தில் நாட்டுப்புறப் பாடல்கள் :

*ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இல்லற வாழ்க்கையில் குழந்தை ஒன்று பெற்றிட வேண்டும் என்பது அனைவரும் விரும்புவது இயற்கையை. குழந்தை பெருத பெண் சமூகத்தில் ஏளனம் செய்வார்கள். குலம் வளர பிள்ளை வேண்டும் என குடும்ப உறவுகள் விருப்பம் பிள்ளைப் பெற அனைவரும் விரும்புகின்றனர்.*

*குழந்தை இல்லாத பெண், குழந்தைப் பழத்திற்காக ஏங்குகின்றாள். குழந்தையின் ஏக்கம் பெண்ணின் அகத்தில் (உள்ளம்) பாட்டாக வெளிப்படுத்துகிருள்.*

கிண்ணியிலே போட்ட சோற்றைக்
கீறித் தின்னப் பிள்ளை இல்லை
உடன்வரப் பிள்ளை இல்லை
பூக்கிற காலத்திலே
பூமாறிப் போனேனே
காய்க்கிற காலத்தில்
காய்மாறிப் போனேனே . . .

*என தனது மனக்குறையை எடுத்துரைக்கின்றாள். மேலும் தானம், தருமங்களை எடுத்துக்*

*கூறி தன் சோகத்தை வெளிப் படுத்துகின்றாள்.*

எட்டாத கோவிலுக்கு
எட்டி விளக்கேற்றி
தூரத்துக் கோவிலுக்கு
தூண்டா விளக்கேற்றி
சோதி பரதேசிகளுக்குத்
தூமடமும் கட்டிவைத்து ...

(சு. சக்திவேல் 45)

**தாலாட்டு :**

*குழந்தை பிறந்தவுடன் பெண் தாய்மை அடைகிறாள். மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆனந்தம் அடைகிறாள். தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு என்றார் தமிழண்ணல்.*

*தாய்மார்கள் நினைத்தபோது நினைத்தபடி பாடுவதால் தாலாட்டுப் பாடல்களில் பாட வேறுபாடு இருப்பதாக முனைவர் சு. சக்திவேல் கூறுகிறார்.*

*தாய் சேயும் என்ற உறவுப் பிணைப்பிலே பிறந்த இயற்கை கலைதான் தாலாட்டு என்றார் தமிழண்ணல்.*

*தாய் ஆழங்கான முடியாத அன்புக்கடல், கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு என முனைவர் ஆறு. அழகப்பன் கூறுகின்றார். இதில் தமிழ் மொழியில் முதன் முதலாகத் தாலாட்டுப் பாடியவர் பெரியாழ்வார் ஆவார்.*

*பின் தன் குழந்தைக்கு தாய் தாலாட்டு முத்துக்கள் என வருணிக்கிறாள்.*

பாண்டிப் படிமுத்து கண்ணே நீ
பஞ்சவர்கள் ஆண்ட முத்து
ஆயிரம் முத்தினிலே
ஆராய்ந்து எடுத்த முத்து
தொண்ணூற்று முத்தினிலே
கண்ணே நீ
துழாவி எடுத்த முத்து..

(கா.கோ. வெங்கடராமன் 356)

*இதனை மேலும் மாதத்தின் அடிப்படையில்*

மாசிப் பிறையோ நீ வைகாசி
மாங்கனியோ
தேகப் பிறையோ நீ தெவிட்டாத
மாங்கனியோ
எங்கள் குலம் மங்காமல் எதிர்
குலத்தார் ஏசாமல்
தங்கமலி பொக்கிஷத்தைத்
தானாள வந்த கண்ணோ

*இப்படி பல்வேறு பாடல் களை தன் குழந்தை தாலாட்டு மூலம் வெளிப்படுத்துகிறார்.*

*தாலாட்டின் பாடல் பொருளை மூன்று பெரும் பிரிவாக பிரித்து காட்டுகிறார், முனைவர் சு. சக்திவேல்.*

**குழந்தையைப் பற்றியன**

*குழந்தைக்குரிய கருவிகளைப் பற்றியன*

*குழந்தைகளின் உறவினரைப் பற்றியன (சு. சக்திவேல் 45)*

### விளையாட்டுப் பாடல்கள் :

சடுகுடு மயிலையே ரெண்டானே
தவறி விழுந்தது இழட்டானே
தூக்கி விட்டது இளவட்டம்
இளவட்டம் இளவட்டம் . . .

*என குழந்தைகள் விளையாடும் போது பாடும் சடுகுடு பாடல் ஆகும்.*

கைவீசு அம்மா கைவீசு
கடைக்கு போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய் தின்னலாம் கைவீசு
கோயிலுக்குப் போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கைவீசு . . .

*எப்போதும் குழந்தைகள் (சிறுவர்) பாடும் பாடல்களை பத்து வகையாக பிரித்து காட்டுகிறார். முனைவர் சு. சக்திவேல். நாப்பயிற்சிப் பாடல் என்னும் பயிற்சிப் பாடல், அறிவு வளர்ச்சி பாடல், நீதிப் பாடல், பத்திப் பாடல், பறவை மிருகங்கள் பற்றிய பாடல், விழாக் காலப் பாடல், வேடிக்கைப் பாடல், வினாவிடைப் பாடல், விளையாட்டுப் பாடல்கள் என நாட்டுப்புறவியல் அறிஞர் முனைவர் சு. சக்திவேல் எடுத்து உரைக்கின்றார். (சு. சக்திவேல் 48)*

*மேலும் வினாவிடை பாடல்கள் கீழ்காணும் அமைப்பில்,*

ரோஸ் ரோஸ் என்னா ரோஸ்
பட்டு ரோஸ் என்னா பட்டு
காஞ்சிப்பட்டு என்னா காஞ்சி
மதுரைக்காஞ்சி என்னா மதுரை
மாமதுரை என்னா மா
டீச்சர் அம்மா என்னா டீச்சர்
கணக்கு டீச்சர் என்னா கணக்கு
லட்டு கணக்கு என்னா லட்டு

**திருப்பதி லட்டு** *என கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுண்டகாப்பட்டி கிராமத்தில் அறிவு வளர்ச்சிக்கும், சிந்தனையை தூண்டும் விதமாக இப்பாடல் அமைகிறது.*

### முடிவுரை

*இலக்கண, இலக்கியத்திற்கு வரம்பிற்கு உட்படாத பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்கள் எளியவை இனியவை என எழுதப்படாதவை. வாயில் பிறந்தது செவிகளில் (காது) வழியே காற்றில் மிதந்து கருத்திலே இனிப்பவை இப் பாடல். சொல்லின்பம், பொருளின்பம், கலையின்பம் சேர்ந்து வரும். நாட்டுப்புறப் பாடல்கள் தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக வளர்ச்சி பெற்று வருகின்றன என்பதில் ஐயமில்லை. நாட்டுப்புறப் பாடல்கள் வளர்ப்போம். பேணிக் காப்போம்.*

❒

# சென்னை தினம்

**ம. உமாமகேஸ்வரி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
சென்னை கிறித்துவக் கல்லூரி,
தாம்பரம்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர்
பிறர்க்கு

என்ற வள்ளுவரின் வாக்கிற் கிணங்க, எழில் மிகு சென்னை, சீர் மிகு சென்னை, சிங்காரச் சென்னை என்று தான் வளர்ந்தது மட்டுமல்லாமல், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னைக் கிறித்துவக் கல்லூரி, சென்னைக் கடற்கரை, சென்னை சென்டல், சென்னை மெட்ரோ ரயில், சென்னை சூப்பர் கிங்ஸ் முதல் இன்று சென்னை உயர்நீதி மன்றம் வரை, தன் பெயரைக் கொடுத்து, மற்றத் துறைகளையும் வாழ வைத்துக் கொண்டிருக்கும் சென்னையில் நானும் வசிக் கிறேன் என்று பெருமைப் படுகிறேன்.

நேற்று சென்னைக்கு வயது 378 தொடங்கியதாம்.

யார் சொன்னது நம் சென்னைக்கு 378 வயது என்று நான் கூறுகிறேன் நம் சென்னை 2000 வயதை கடந்தது என்று எப்படி என்கிறீர்களா உலகையே புரட்டி போட்ட திருக்குறளைத் தந்த வள்ளுவன் வாழ்ந்தது சென்னை மயிலாப்புரில் என்று நீங்கள் கேட்டதில்லையா கார்தரு சோலை கபாலீஸ்வரம் அமர்ந் தான் என்று திருஞானசம்பந்தர் பாடிய கபாலீஸ்வரர் கோவில் இங்கு இல்லையா.

நீளோதம் வந்தலைக்கும் மா மயிலை மாவல்லிக்கேணியான் என்று திருமங்கையாழ்வார் பாடிய திருவல்லிக்கேணி இங்கு இல்லையா. பட்டினத்தடிகள் வாழ்ந்து சமாதியான திருவெற்றியூர் இங்கு இல்லையா.



முகமது நபிகளின் சாபாக்கள் தங்கி சென்ற தர்க்கா உள்ள கோவளம் இங்கு இல்லையா. சேக்கிழார் பெருமான் வாழ்ந்த குன்றத்தூர் இங்கு இல்லையா.

இப்பொழுது சொல்லுங்கள் சென்னை 2000 வயதை கடந்து விடவில்லையா.

இலக்கியங்களைப் படியுங்கள். சென்னையின் இளமைப் புரியும்.

நுனி நாக்கில் ஆங்கிலம் படமெடுத்து ஆடினாலும் தாய் மொழியின் தரத்தை தவற விடாதது நம் சென்னை அதனால் தான் மதராசப்பட்டின மாக இருந்தது,

ஆங்கிலேயரின் உதட்டில் பட்டு மெட்ராஸாக மாறியதை பொறுக்க முடியாமல் அன்று ஆட்சி செய்த சென்னப்ப நாயக்கரின் நினைவாக சென்னையாக மாறியது.

வந்தாரை வாழ வைக்கும் தமிழகம் அந்த தமிழக மக்களையே வாழ வைப்பது நம் சென்னை மாநகரம் மக்கள் மட்டும் வாழ்வதில்லை எங்கள் சென்னையில் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் வாழ்விடமாக, ஆசியாவிலேயே மிகப்பெரிய மிருகக்காட்சி சாலையும் உள்ளது எங்கள் சென்னையில் தான்.

முதல் உலகப்போரில் அழிந்த ஒரே நகரமாக இருந்தாலும்.

உலகத்தின் சிறந்த நகரங்களுள் ஒன்றாக தன்னை மெருகூட்டியது சென்னை உலகத்தின் அடையாளமாம் சென்னை மெரினா.

வறுமையில் வாடுபவரின் வயிற்றை நிரப்புவதும் சென்னை மெரினா.

வசதியில் வாழ்பவரின் வயிற்றைக் குறைப்பதும் சென்னை மெரினா.

வயது வித்தியாசம் இன்றி, இன வேறுபாடு இன்றி, அனைவருக்கும் வாழ்வு கொடுப்பது சென்னை மெரினா.

தீபாவளிக்கும் திருவிழாவுக்கும் தானே வானவேடிக்கைப் பார்த்திருப்பீர்கள். எங்கள் சென்னையின் இரவுநேர சாலைகளில் தினமுமே வானவேடிக்கைத்தான்

அவசரத்தில் மக்கள் ஓடுவதைத்தானே பார்த்திருப்பீர்கள்.

மக்களுக்காக படிகளும் ஓடும் எங்கள் சென்னையில் விமானங்கள் பறப்பதைத்தானே பார்த்திருப்பீர்கள்.

இரயில் பெட்டிகளும் பறக்கும் எங்கள் சென்னையில்.

பரப்பளவை மீறி மூன்று மடங்கு மக்கள் தொகை இருந்தாலும் மக்கள் ஒருவர் தலையில் ஒருவர் ஏறி அடுக்கு மாடி கட்டிடங்களில் அமர்க்கள

மாய் வாழ்வார்கள் எங்கள் சென்னையில் படிக்க பள்ளியா கலை வளர்க்க கல்லூரியா.

உயிர் காக்கும் மருத்துவமா. பொறி வளர்க்கும் பொறியியலா.

வரலாற்றை விளக்க நூலகமா சாட்சி சொல்ல நினைவகமா பொழுது போக்க சினிமாவா சுற்றித் திரிய பூங்காவா.

கண்ணாடி கட்டிடமா காற்றாய் பறக்கும் வாகனங்களா.

பந்திக்கு அறுசுவை உணவா. பணம் கொடுக்கும் தொழில் நுட்பமா.

காசு கொடுக்கும் டெபிட் கார்டா கடன் கொடுக்கும் கிரடிட் கார்டா.

என்ன இல்லை எங்கள் சென்னையில்.

ஆறிலிருந்து அறுபது வரை அனைவரும் விரும்புவர் எங்கள் சென்னையை.

மாசு, குப்பை, விபத்து, போக்குவரத்து நெரிசல், நோய் என்று தொடர்ந்து, கடைசியாக வந்த மழைவெள்ள வில்லனையும் தாண்டி, தன்னைத்தானே புதுப்பித்துக் கொண்ட சூப்பர் ஸ்டார் எங்கள் சென்னை.

பிறகு ஏன் சென்னைதினம் வாழ்த்துக்களைக் கூறுக்கூடாது என்கிறீர்களா?

சென்னைத் தினத்தின் வரலாறு தெரியுமா உங்களுக்கு.

சென்னைத்தினம் பிறந்த கதை தெரியுமா உங்களுக்கு.

அட கதையா கூறுங்கள் என்ற ஆர்வத்தைக் காட்டிலும்.

சென்னைதின வாழ்த்துக் களை ஏன் கூறக்கூடாது என்ற வினா உங்கள் விழிகளில் தெரிவதை என்னால் உணர முடிகிறது.

1639 ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் வாணிபம் செய்வதற்காக கப்பலில் வந்த போது,

அன்றைய ஆள் அரவம் அற்ற அகலமான சென்னைக் கடற்கரை அவர்கள் கண்ணில் பட்டது.

தன் வாணிபத்தை வளர்ப்ப தற்கும் சரக்குகளைக் கப்பலில் இருந்து இறக்குவதற்கும் வசதி யான இடம் என்று தீர்மானித் தனர்.

அன்றைய விஜயநகர பேரரசின் கீழ் இருந்த அரசர் களை ஆசை வார்த்தைகள் கூறி அந்த இடத்தை ஆக்கிரமித்தனர்.

அப்படி அவர்களுக்கு நாம் நம் இடத்தை பத்திர பதிவு செய்து கொடுத்த நாள் ஆகஸ்டு 22. அதைத்தான் நாம் இப்போது சென்னைத் தினமாகக் கொண் டாடுகிறோம்.

இப்பொழுது சொல்லுங்கள்.

ஆங்கிலேயர்களிடம் நாம் ஏமாந்த தினத்தையா கொண் டாடுவது நாம் அடிமையா வதற்கு ஆதரமாக இருந்த நாளையா கொண்டாடுவது.

அதற்காக சென்னைத் தினத்தை மறந்துவிடுங்கள் என்று கூறவில்லை.

இத்தனை பெருமைகளையும், வாய்ப்புகளையும் வசதிகளையும் கொண்ட சென்னையைக் கொண்டாடுங்கள் சென்னை தினத்தை அல்ல.

சென்னைக்கு வாழ்த்து தெரிவியுங்கள் சென்னை தினத்திற்கு அல்ல.

புரிய வில்லையா.

புற்றுநோய் தினம், நீரழிவு நோய் தினம், எய்ட்ஸ் தினம், மலேரியா தினம், ஆஸ்துமா தினம், இதயநோய் தினம்.

என்று கூடத்தான் தினங்கள் இருக்கின்றன அதற்காக அந்தந்த தினங்களில் அந்தந்த நோயாளி களுக்குச் சென்று வாழ்த்து தெரிவிப்பீர்களா.

எங்கே நீரழிவு நோய் தினத் தன்று சர்க்கரை நோயாளி களுக்கு வாழ்த்து தெரிவியுங்கள் பார்க்கலாம்.

முடியாதல்லவா அப்படித் தான் இந்த சென்னைத் தினம்.

சென்னை தினத்தைக் கொண் டாடாதீர்கள் மாறாக விழிப் போடு இருங்கள் மீண்டும் இப்படி ஒரு தினம் மீண்டும் வந்து விடக் கூடாது என்பதற் காக.

அளவுக்கு மீறி சர்க்கரையை உண்டதால் சர்க்கரை நோய் வந்தது.

அளவுக்கு மீறி ஆசைப்பட்ட தால்தான் அடிமை நோய் வந்தது.

அப்படி நம் முன்னோர் பெற்ற நோயை நாமும் பெறாமல் இருக்க விரதம் இருங்கள்.
வயிற்றால் அல்ல.
மனதால்.

**அவா இல்லார்க்கு இல்லாகுத்**
**துன்பம் அஃதுண்டேல்**
**தவாஅது மேன்மேல் வரும்..**

என்ற திருக்குறளுக்கு ஏற்ப தேவைக்கேற்ப ஆசைப்பட்டு, தேவைக்கேற்ப உழைத்து,

இனி வரும் காலத்திலும் இதே போன்று இனிமையாக வாழ, இயல்பாய் வாழ பழகுங்கள்.

❒

# சங்கப் பெண்பாற்புலவர்களின் கையறுநிலைப் பாடல்களில் வினைமுற்றுச் சொற்கள்



**இர. ஹேமலதா,**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
(தன்னாட்சி), கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 - 059.

---

**முன்னுரை:**

கழிந்தோர் தேத்து கழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு
நிலையும் (தொல் - புற - 77)

என கையறு நிலைபற்றி தொல்காப்பியம் சுட்டுகிறது. இதற்கு செத்தோர் மாட்டுச்

சாவாதார் வருத்தமுற்று புலம்பிய கையறுநிலை என இளம்புரணர் பொருள் சுட்டுகிறார்.

கையறுநிலை என்பதற்கு செயலற்று இருத்தல், ஆற்றாமை, இயலாமை,

இழப்பின்கண் ஏற்படும் புலம்பல் என பலவாறு பொருள் கொள்ளலாம். சங்கப் பெண்பாற் புலவர்களின் கையறு நிலைப் பாடல்களில் அமைந்துள்ள இலக்கணக் கூறுகளுள் வினை முற்றுச் சொற்களின் அமைப் பாக்கம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**கையறுநிலைப் பாடல்கள் :**

புறநானூற்றில் 43 பாடல்கள் கையறுநிலைத்துறை சார்ந்தவை யாக உள்ளன.

அவற்றுள் ஐந்து பாடல்கள் மட்டுமே பெண்பாற் புலவர் களுடையது.

ஔவையார் பாடியவை மூன்று - 231, 232, 235

பாரிமகளிர் பாடியது ஒன்று - 112

மாறோகத்து நப்பசலையார்
பாடியது ஒன்று - 226

மேற்கண்ட இவ்வைந்து பாடல்கள் மட்டுமே ஆய்விற்குட் படுத்தப்பட்டுள்ளன.

இக்கையறுநிலைப் பாடல் களில் காணப்படும் வினைமுற்றுச் சொற்களின் பயன்பாட்டை

ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

- ★ வினைமுற்று (தெரிநிலை)
- ★ வியங்கோள் வினைமுற்று
- ★ எதிர்மறை வினைமுற்று
- ★ குறிப்பு வினைமுற்று

ஆகிய வினைமுற்றுச் சொற்கள், இக்கையறுநிலைப் பாடல்களில் ஒரு குறிப்பிட்ட

உணர்வுகளைக் கூறுவதற்காக எடுத்தாளப்பட்டுள்ளது.

## வினைமுற்று :

வினைமுற்றுச் சொற்களைப் பொறுத்தவரையில் பொதுவாகவே ஆண்பாற் புலவர்களின் பாடல் களை விட பெண்பாற் புலவர் களின் பாடல்களில் அதிகமாகக் காணப்படுவதாக எல்.இராம மூர்த்தி அவர்கள் தனது தமிழ் இலக்கியங்கள் : கட்டவிழ்ப்பும் கட்டமைப்பும் என்கிற நூலில் கூறியுள்ளார்.

அதற்கேற்றவாறு ஔவை தனது பாடல்களில் மிகுதியாக இத்தகையச் சொற்களை கை யாண்டுள்ளார். பெரும்பாலும் இப்பாடல்களில் பயன்று வரும் வினைமுற்றுச் சொற்கள் யாவும் அரசன் புகழுடன் வாழ்ந்தபோது அவர் செய்த சிறப்பான நிகழ்வு களைக் குறிப்பிடவே பயன் படுத்தப்பட்டுள்ளன. சான்றாக

சிறியகள் பெறினே எமக்கு ஈயும்
மன்னே பெரிய கள் பெறினே

யாம்பாடத் தான்மகிழ்ந்து
உண்ணும் மன்னே

சிறு சோற்றா னும் நனிபல
கலத்தன் மன்னே

பெரும் சோற்றா னும் நனிபல
கலத்தன் மன்னே

என்பொடு தடிபடு வழி எல்லாம்
எமக்கு ஈயும் மன்னே

அம்பொடு வேல்நுழை வழி
எல்லாம் தான் நிற்கும் மன்னே

நரந்தம் நாறும் தன் கையால்

புலவு நானும் என்தலை தைவரும்
மன்னே (புறம் - 235)

எனத் தொடர்கின்ற இந்தப் பாடலில்

ஈயும் - தருவான்

உண்ணும் - உண்டு மகிழ்வான்

கலத்தன் - கலந்து உண்பான்

நிற்கும் - வீரத்துடன் நிற்பான்

தை வரும் - தடவிக் கொடுப்பான்

ஆகிய வினைமுற்றுச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவ் வினைமுற்றுச் சொற்கள்

யாவும் அதியனின் வீரம், கொடை, பண்பு நலன் ஆகிய வற்றைக் குறிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுபோலவே

நடுகல் பீலிசூட்டி நார் அரி

சிறுகலத்து வகுப்பவும் கொள்வன் கொல்லோ்

என்கிற ஔவையின் மற்றொரு பாடலிலும் கொள்வன் என்கிற வினைமுற்றுச் சொல்லும் அதியனின் கொடைப் பண்பைக் குறிப்பதாகவே அமைந்துள்ளது.

அதியனுக்கு நடுகல் எழுப்பி மயில் தோகையை சூட்டி, சிறிய கலத்தில் நாரால் அரிக்கப்பட்ட கள்ளினை வைத்து படைத்தால் அவன் ஏற்றுக் கொள்வானோ, மாட்டானோ என்கிற ஐயப் பொருள் தொனிக்க ஔவை இப்பாடலை படைத்துள்ளார். அதியன் கொடையில் சிறந்தவன் ஆகையால் அவன் கொடுப்பவன் அல்லாது பெறுவதில் உடன்பட மாட்டான் என்கிற பொருளில் இச்சொல் இடம் பெற்றுள்ளது.

பாரி மகளிரின் பாடலை நோக்கும் போது,

அற்றை திங்கள் அவ்வெண் நிலவில்

எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர் கொளார்

இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்

வென்றெறி முரசின் வேந்தர் எம்

குன்றும் கொண்டார் யாம் எந்தையு மிலமே (புறம் : 112)

தம் தந்தையைக் கொன்ற வேந்தர் எம் குன்றும் கொண்டார் என்ற தொடரில் கொண்டார் என்கிற வினை முற்றுச் சொல்லானது, பாரி மகளிரின் கவலையைக் குறிப்பதாக காணப்படுகிறது.

மாறோகத்து நப்பசலையார் மட்டும் தமது கையறுநிலைப் பாடலில் இதுபோன்ற வினை முற்றுச் சொற்களை பயன்படுத்த வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## வியங்கோள் வினைமுற்று :

சங்கப் பெண்பாற்புலவர் களின் கையறு நிலைப் பாடல் களுள் ஔவையின் பாடல்களில் மட்டுமே வியங்கோள் வினை முற்றுச் சொற்களைக் காணமுடி கிறது.

*(எ.கா)*

எறிபுனக் குறவன் குறையல் அன்ன
கரிபுற விறகின் ஈம ஒளி அழல்
குறுகினும் குறுகுக குறுகாது சென்று,
விசும்பு உற நீளினும் நீள்க பசுங்கதிர்த்
திங்கள் அன்ன வெண்குடை
ஒண் ஞாயிறு அன்னோன் புகழ்மா யலவே. (புறம் - 231)

இல்லா கியரோ காலை மாலை



அல்லா கியர்யான் வாழும் நாளே
நடுகல் பீலிசூட்டி நார் அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ
கோடுஉயர் பிறங்குமலை கெழீஇய
நாடுஉடன் கொடுப்பவும் கொள்ளா
தோனே. (புறம் - 232)

*ஆகிய இரு பாடல்களிலும்*

- ★ *குறுகினும் குறுகுக*
- ★ *நீளினும் நீள்க*
- ★ *இல்லாகியர்*
- ★ *அல்லாகியர்*

*ஆகிய வியங்கோள் வினை முற்றுச் சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. மேற்கண்ட வினைமுற்றுச் சொற்களை நோக்கும் பொழுது தனது ஆற்றாமையை வெளிப்படுத்தவே புலவர் கையாண்டிருக்கிறார்.*

*அதியனின் உடலை எரிப்பதற்கு அவனது உடல் மீது சுள்ளிகள் அடுக்கப்பட்டிருக் கிறது. தீயானது அவனது உடலைச் சுடாமல் அணைந்தாலும் அணை யட்டும் அல்லது வானத்தைத் தொடுமாறு அத்தீயானது மேல் எழுந்தாலும் எழட்டும்.*

*எப்படியிருப்பினும் வெண்ணிலவு போன்ற வெண் கொற்றக் குடையும், ஞாயிறு போன்று ஒளி வீசும் அவனது புகழானது என்றும் அழியாது என்ற பொருள்படுமாறும், அதியன் இல்லாத காலை மாலைப் பொழுதுகள் இல்லாமல் போகட்டும். அவனின்றி யான்*

வாழும் நாட்களும்

அல்லாமல் போகட்டும் என்றும் ஔவை தனது ஆற்றாமையை வெளிப்படுத்த இத்தகைய வியங்கோள் வினை முற்றுச் சொற்களை பயன்படுத்தியமையைக் காண முடிகிறது.

## எதிர்மறை வினைமுற்று :

நாடு உடன் கொடுப்பவும்
கொள்ளாதோனே (புறம் - 232)

எந்தையும் உடையேம் : எம்
குன்றும் பிறர் கொளார்
(புறம் - 112)

மேற்கண்ட இரு பாடல் தொடர்களிலும் எதிர்மறை வினைமுற்றுச் சொற்கள் பயின்று வந்துள்ளன. ஒன்று ஔவை (புறம் - 232) பாடியது. பிறிதொன்று பாரி மகளிர் (புறம் - 112) பாடியது. இவ்விரண்டு எதிர்மறை வினைமுற்றுச் சொற்களும் அரசனது சிறப்பியல்பினைக் (கொடை, வீரம்) கூறுவதாக அமைந்துள்ளன.

அதியனானவன் உயர்ந்த சிகரங்களை உடைய பெரிய மலை நாட்டினையே கொடுத்தாலும் பெற்றுக் கொள்ளாதவன். பிறர்க்கு கொடுப்பதற்காகவே பிறந்தவன் என்று அவனது பண்பை ஔவை இத்தகையச் சொற்களால் பதிவு செய்கிறார்.

பாரி இருக்கும் போது அவனது நாட்டை எந்த பகை அரசனும் நெருங்க முடியாது.

அத்தகைய வீரனாக இருந்தான். அவன் இறந்த பிறகு அவனது நாட்டை பகை அரசர்கள் வெற்றி கொண்டனர். எனது தந்தையும் உயிருடன் இல்லை என தனது தந்தையின் வீரத்தை பாரிமகளிர் பதிவு செய்துள்ளார்.

## குறிப்பு வினைமுற்று :

சங்கப் பெண்பாற் புலவர்களின் கையறுநிலைப் பாடல்களில் குறிப்பு வினைமுற்றுச் சொற்கள் அதிகமாக இடம் பெற்றுள்ளன. பெரும்பாலும் அவை ஈடுசெய்ய இயலாத இழப்பின் சோகத்தை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

எந்தையும் உடையேம் : எம்
குன்றும் பிறர் கொளார்
(புறம் - 112)

ஆசு ஆகு எந்தை யாண்டு உளன்
கொல்லோ (புறம் - 235)

இனி பாடுநரும் இல்லை,
பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும்
இல்லை (புறம் - 235)

பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி

இரந்தன்று ஆகல் வேண்டும்.

மேற்கண்ட பாடல் அடிகளில்

★ உடையேம்

★ உளன்

★ இல்லை

★ வேண்டும்

ஆகிய குறிப்பு வினைச் சொற்கள் இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

எனது தந்தை உயிருடன் இருந்தார் அப்போது எங்களது நாட்டை எப்பகை அரசனும் வெற்றி கொள்ளவில்லை என தந்தையின் அருகாமையை உணர்ந்து பாடிய பாரிமகளிரும், உயிருக்கு துணை செய்யக்கூடிய தலைவனாகிய அதியன் எங்கிருக்கிறானோ? இனி இவ் வுலகில் பாடி பரிசில் பெற வரு வாரும் இல்லை. வருவோர்க்கு ஈவாரும் இல்லை என ஔவையும், எமன் கூட பாடுநர் போல வந்து கை தொழுது வணங்கி சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனது உயிரை கவர்ந்து சென்றிருக்க வேண்டும் என மாறோகத்து நப்பசலை யாரும், ஈடுசெய்ய இயலாத இழப்பை அவரவது பாடல்கள் மூலம் இத்தகைய சொற்களைக் கொண்டு பதிவு செய்திருக் கிறார்கள்.

**முடிவுரை :**

புறநானூற்றில் இடம் பெற்றுள்ள சங்கப் பெண்பாற் புலவர்களின் கையறுநிலைப் பாடல்களை நோக்கும் போது பெரும்பாலும் வினைமுற்றுச் சொற்களை ஒரேவித மனவுணர் வை வெளிப்படுத்தவே பயன் படுத்தியுள்ள நிலையை அறிய முடிகிறது.

கையறுநிலைப் பாடல்கள் என்பதாலேயே உயிருடன் இருந்தோரது சிறப்பையும், புகழையும் எடுத்தியம்பிப் புலம்பும், நாட்டுப்புறப் பாடல் கூறுகளுள் ஒன்றான ஒப்பாரி பாடல்களை ஒத்ததாகவும் இவை அமைந்துள்ளன. இயற்கை யாய் அமைந்த மனவுணர்வு களை சங்கப் பெண்பாற் புலவர்கள் தம் மொழித்திறன் மூலம் சங்கப் பாடல்களைப் படைத்திருப்பது அவர்களது மொழி ஆளுமையைப் புலப் படுத்துவதாகத் திகழ்கிறது.

❒

# இறையருட் கவிமணி
# கா. அப்துல் கபூரின்
# பொன்னான பொன்மொழி நானூறு

**சு. கவிதா,**
எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
இசுலாமியா கல்லூரி (த),
வாணியம்பாடி.



**முன்னுரை**

*உலகில் மனித இனம் தோன்றிய நாள்முதலே அவனின் தேவைகளுக்கான யாவற்றையும் அவனே நிவர்த்தி செய்து கொள்ளும் அளவிற்கு வாழ்வினை செம்மையாக செப்பனிட்டுக் கொண்டான். வாழ்வு செம்மையுற தன் மனம் போன போக்கில் போகாமல் மனதினைக் கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்தி பொன்னான வாழ்வினை வாழ்ந்தனர். வாழ்வின் நிகழ்வுகளிலிருந்து அறிவின் பயனாகக் கிடைக்கும், கருத்துக்கள் பல அனுபவங்களையும், நல்ல எண்ணங்களையும், நம்முள் விதைக்கிறது. நாம் கண்ட காட்சிகள், பெற்ற அனுபவங்கள், சந்தித்த நிகழ்வுகள் நமக்குள் பல பரிமாணங்களை உருவாக்கி பல கருத்துகளை உண்டாக்கி மனதுள் உருளச் செய்கிறது. எல்லோர்க்கும் நல்வாழ்க்கை கிடைக்கப் பெறுவதில்லை. ஆனால் எல்லோரும் நல்வாழ்க்கை வாழ அதற்கான வழிமுறைகளும், நெறிமுறைகளும் கிடைக்கப்பெற போராடுகின்றனர். போராட்டம் கொண்ட வாழ்வுதனில் இறைநிலையைப் போற்றி வாழும் வாழ்வுதனை மக்களில் ஒரு சிலரே கடைப்பிடிக்கின்றனர். அவ்வாறு கடைப்பிடித்து வாழ்ந்து இறைநிலையைப் போற்றி பல நற்பண்புகளைப் படைத்து,*

அறிவிழந்து மாக்களாகத் திரிபவர்களை மக்களாக மாற்றிக் கொண்டிருக்கும் இறையின் அருள் பெற்ற இறையருட் கவிமணி பேராசிரியர் கா.அப்துல் கபுரின் பொன்மொழி நானூறு எனும் படைப்பு பொன்னான வாழ்வினை பலருக்கும் நல்கிக் கொண்டிருக்கிறது இறையைப் நபோல.

உலகில் இனிய மார்க்கம் இசுலாம். பல நற்சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டு பல நன்மைகளையும் இறைச் சிந்தனைகளையும், வேதாந்த போதனைகளையும் மக்களுக்கு, வழங்கிக் கொண்டிருக்கின்றது. இம்மாபெரும் புனித மார்க்கத்தில் இறை ஞானியாகத் திகழ்ந்தவர் கபுர் ஆவார். இறைவனின் மீது அளப்பரிய பக்தி கொண்டவர். இவரின் உரைநிகழ்த்தும் தன்மையானது மேன்மேலும் கேட்டுக் கொண்டே இருக்கச் செய்யும் வகையில் அமைந்தது இறைவனின் அருளாலே. எளியவரிடத்தும் உயர்ந்தோரிடத்தும் மிக எளிமையாய் அன்பாய் உண்மையாய் பழகுபவர். மனிதர்களுடன் அன்பு கொண்ட நல்ல மனிதராய் வாழ்ந்தவர்.

உலகின் மூத்த மொழி, முதல் மொழி, முத்தான மொழி, முழுமை பெற்ற மொழி, செம் மொழியான நம்மொழி அதுவே தமிழ் மொழியின் மீது தீராத காதலும், உண்மையான பற்றும் கொண்டவர். இவரின் தமிழ் மொழிப்பற்றே இவரின் படைப்புகள் யாவற்றையும் தமிழ் மொழியிலேயே படைக்கச் செய்தன. தம் முதல் படைப்பு முதற்கொண்டு இறுதி மூச்சுயுள்ளவரை தம்மதத்தின் நற்கருத்தையும் தமிழின் இனிமையையும்,ந உயர்வையும் குன்றுது ஒருங்கே இணைத்துப் போற்றிப் பலவற்றைப்ங் படைத்துள்ளார். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இசுலாமியத் தமிழ் இலக்கிய படைப்பாளராகத் திகழ்ந்தவர் இறையருட்கவிமணி பேராசிரியர். கா.அப்துல்கபுர் ஆவார்.

பொன்மொழி நானூறு பல மாற்றங்களுக்கும், சுழற்சிக்கும், வளர்ச்சிக்கும் தன்னை உட்படுத்தி காலம் பல அற்புதங்களைச் செய்திருக்கிறது. காலத்தின் மாற்றத்தால் மதிப்பினை இழக்காமல் எக்காலத்திலும் எல்லோரையும் கவர்வது பொன். மதிப்புயர்ந்த மணிகளும் உலோகங்களும் நிலத்தின் மீது சிதறிக் கிடக்காமல் மண்ணுக்கடியில் புதைந்திருப்பதைக் காண்கிறோம். மனிதன் தன்னு டைய அரிய முயற்சியினால் புதைந்திருப்பதை எல்லாம் வெளிக் கொணர்ந்து இதனை அணியாகச் செய்து அணிந்து பயன்பெறுகிறான். வாழ்க்கையானது

போராட்டம் நிறைந்தது. இன்பமும் துன்பமும் பின்னிப் பிணைந்தது. பல புதிர்களையும், சதிர்களையும் கொண்டது. உலக உயிர்களில் விலங்குகளும் பறவைகளும் இவை போன்ற இன்ன பிற உயிர்களும் பிறந்தது முதல் பிறர் உதவியின்றி வாழத் தொடங்கி விடுகின்றன. ஆனால் மனித உயிர் மட்டும் பிறர் உதவியின்றி தான் வாழ சில ஆண்டுகள் தேவைகொள்கிறது. என்றாலும், உலக உயிர்களில் மணியாக கருதப்படுவது மனித உயிரே. தன் சிந்தனைகளின் சிறப்பினால் பல பயன்களைப் பெற்றுள்ளான். காலத்தின் மாற்றத்தால் புதைந்து கிடக்கும் பல கருத்துக் கருவுலங் களை அகழ்ந்தெடுத்து சேர்த்துக் கட்டி 400 பொன் மொழிகளாகத் திரட்டி பொன் மொழி நானூறு என்ற இறையருள் நூலைப் படைத்துள்ளார் இறையருட் கவிமணி அவர்கள்.

இப்பொன்மொழி நானூற்றில் பொதிந்துள்ள பொன்னான கருத்துக்களை 40 அரிய தலைப்பு களில் படைத்துள்ளார். அவை யாவன,

1. இறைவன்
2. உலகம்
3. மனிதன்
4. இன்பம்
5. அன்பு
6. குறிக்கோள் - நேர்மை
7. வாழ்க்கை
8. மாதர்
9. திருமணம் - குழந்தைகள்
10. செல்வம்
11. வெற்றி
12. கல்வியறிவு
13. கலை - கற்பனை
14. சிந்தனை
15. உழைப்பு முயற்சி
16. நாநலம்
17. உள்ளம் - எண்ணம்
18. காலம் - ஆட்சி
19. நட்பு
20. விளக்கம்
21. மரணம்
22. வேண்டும்
23. வேண்டாம்
24. நல்லவை
25. தீயவை
26. ஆய்க
27. தோய்க
28. உணர்க
29. வாழ்நெறி
30. நல்லொழுக்கம்
31. சட்ட ஒழுங்கு
32. எச்சரிக்கை
33. உவமை
34. அழகு
35. எண்ணுக
36. சுடர்கள்
37. மணிகள்
38. முத்துக்கள்
39. பல்சுவை

*40. பல்வகை போன்றன வாகும்.*

## மனிதன்

*புவியில் படைக்கப்பெற்ற உயிர்களில் மனித உயிரே மகத்தானது, மேலானது. ஏனெனில் மற்ற உயிர்களைவிட மனித உயிர்க்குச் சிந்தித்து செயல்படும் திறம் இருப்பதே பிற உயிர்களிடத்தும் சிறந்த தாக்கிடு கிறது. மண்ணில் வாழ்ந்து மறைந்த பின்னரும் வாழும் மாண்பை எடுத்துச் சொல்கின்ற எண்ணத்தை விட்டுச் செல்பவன் ஏற்றமிகு மனிதன் என்றும் இவ்வுலகில் இழிந்த மனிதனென்று எவரையும் நோக்காதீர், இழிந்த புழுதியில் இருப்பதும் தங்கம் தானே, ஒன்றைச் செய்பவன், முடிப்பவன் சாதிப்பவன் செய்யவியலாதவன் அதை போதிப்பான், செய்கின்ற செயலே ஒரு மனிதனை உலகிற்கு உணர்த்தும் என்றும், நூலினை மேலுறையால் மதித்தல் போல் மனிதனை மேல் பார்த்து மதிதிடலாமா என்றும், தொலை வானத்தை ஆராய்ந்தறியும் மனிதன் தலையின் மேலுள்ள சிலந்தி வலையை காணாமலிருக் கிறான் என்றும்,*

பின்முறை உறையும் பாருலகில்
பிறர்குறை காண்போன் அரைமனிதன்
தன்குறை காண்போன் முழுமனிதன்
தன்மை அறிவாய்
பொன்மொழியே- பொ.மா.நா
(ப.எ 13)

*திரட்டுச்சீட்டுக் காட்சி ஒன்று தான், புரட்டிப் பார்த்தால் தான் தெரியும் புவியோர் அதுபோல் தான் என்றும், உன்னை நீயே உணரவில்லை எனில், உன்னை நீயும் அயலார்கள் நம்மை எப்படி உணர்வார்கள் என்றும், இறைவனை முதலில் எண்ணி அஞ்சிடு உலகில் முன்னேற, இறைவனுக்கு அஞ்சா மனிதனை மதிக்காது அவனுக்கு அஞ்சிடு என்றும், நீண்ட வாழ்வு கொண்ட உலகில் நெடுநாள் வாழ விரும்பும் மனிதா! முதுமையை ஏற்றிடத் தயங்குவது ஏன் என்றும் மனிதனின் வாழ்வினையும், வாழ்வின் படைப்பினையும், வாழும் நெறிமுறைகளையும் தெளிவாகக் காட்டுகின்றார்.*

## கல்வி அறிவு

*கல்வியும் அறிவும் மனிதனின் இருகண்களாகும். கல்வியிலா மனிதன் அறிவிலி கல்விகற்கா மனிதன் அரைமனிதன் (அறிவு என்பது அற்றம் காக்கும் கருவி கல்வியில்லா பெண்கள் களர் நிலம் போன்றவர்கள் கல்வி பெற்றால் அறிவும் அறிவினால் நல்ல கல்வியும் கற்கலாம் என்பது எல்லாவும் கல்வியையும் அறிவையும் பற்றிய ஆன்றோர் சான்றோர் வாக்காகும். விண் ணொளி காட்டி நெஞ்சினை*

விரியச் செய்யும் கண்ணின் ஒளி போன்ற கல்வியினைக் கற்பது வாழ்வின் கடன் என்றும், கல்வியின் வேர் கசப்பும் கனி இனிப்புமாகும். இதனை உணர்த்தல் நயத்தற்குரியது என்றும், அணிகள் பலவுண்டு. ஆனாலும் அவையின் அணி கற்றாரே என்பதை,

கற்ருர் அவையின் அணியாவார்'

**கதிரோன் வானின் அணியாவான்**
**உற்றோர் வீட்டின் அணியாவார்**
**உயர்குணம் உன்னணி**
**பொன்மொழியே**
**- பொ.மா.நா (ப.எ 31)**

இப்பாடலின் மூலம் உணர்த்து கிறார்.

அறிவு மனிதனை மற்ற உயிர் களிடத்து வேறுபடுத்திக் காட்டும் சிறந்த திறனாகும். மூளும் அறிவுக்கு எப்போதும் முற்றுப்புள்ளி வைத்தல் அறிவிலியாகும். உயிர் மாளும் வரை அறிவுக்கதவை திறந்து வைத்தலே நல்லது என்றும், பிள்ளைகளைப் பெற்ருேர்கள் ஏசாமல் காட்டுகின்ற பேரன்பை விட, ஆசிரியர்கள் காட்டும் அறிவுக் கடுமையை நல்ல அணியாகக் கொள்வது நல்லது என்றும், திருந்தாத அறிவற்ற அறிவிலி ஒருவனுக்கு திருந்து வதற்கு கூறும் அறிவுரையானது, இறந்தவனின், வாயிக்குள் பிழைக்கும் மருந்து கொடுப்பது போல் வீணானது என்றும், அறிவு என்றும் ஒருவனை உயர்த்தியே வாழவைக்கும் என்பதனை,

**அறிஞன் நாவு அவன் நெஞ்சில்**
**அறிவிலி இதயம் அவன் நாவில்**
**செறிந்தே இருக்கும் இயல்பதனைச்**
**செயலிற் காண்பாய் பொன்**
**மொழியே - பொ.மா.நா (ப.எ 32)**

அறிவானது பொன்முடி போன்றது, அறிவிருந்தால் யானையின் பிடரியில் அமர்ந்து அதனை இயக்கலாம், அறிவிழந் தால் நம்மீது அயலார் அமர்ந்து நம்மை அடிமையாய் இயக்குவர் என்றும், அடக்கம் அடிக்குப் பாதுகை, நெறி வாழ்வின் ஒளி, நேர்மையே மனிதர்க்கு கவச மாகும் என்றும், கருங்கல்லா னது உடைந்து விட்டால் அது மீண்டும் ஒட்டிக்கொள்ளாது, ஒட்டவைக்கவும் முடியாது என்றும், கல்வி இல்லா அறிவு இல்லா மனிதர்களும் இக்கல் வகையினரே, ஆனால் அறிவு டைய கல்வி பெற்ற மனிதர்கள் அருமையான பொன்னைப் போன்றவர்கள், எதிலும் எப் போதும் இணைந்து விடுவர் என்று கல்வியறிவின் சிறப்பினைக் குறிப்பிடுகிறதர் ஆசிரியர்.

## நட்பு

நட்பு ஒவ்வொருவரையும் நலம் கொள்ளவேச் செய்கிறது. நல்ல நட்பென்பது நட்பினைத் தவிர வேறொன்றையும் எதிர்

பார்ப்பதில்லை. எதிர்பார்ப்பில்லாமல், இருக்கும் என்றும் நிலைத்திருக்கும். நட்பென்பது ஆபத்தும் துன்பமும் வரும் போது தானாகவந்து உதவுதாக அமைதல் வேண்டும். அவ்வாறு அமைந்தால் அது இறைக்கு ஒப்பாகும் என்பது அறிஞர் கருத்து. இதனை இறையருட் கவிமணி அவர்கள் உத்தம நண்பன் இறைவனின் கொடை யாவான் நண்பர்கள் ஒன்றாய் இணைந்திருப்பது தான் சித்தம் என்றும், அடிக்கடி நண்பர்களை மாற்றிக்கொண்டே இருத்தல் முறையல்ல, நல்ல நண்பனைத் தேர்ந்தெடுத்திருத்தல் நல்லது என்றும்,

நண்பனுக் குயிரை ஈவதிலும்
நல்லுயிர் கொடுக்கத் தகுதிபெறும்
நண்பனைத் தேர்ந்து கொள்வதுவே
நானிலத் துயர்வாம்
பொன்மொழியே - பொ.மா.நா
(ப.எ 45)

நல்ல நண்பனுக்காக உயிரையும் கொடுத்தல் வேண்டுமென்றும், பயனில்லாத உண்மையாயில்லாத நண்பர்கள் பலரிருத்தல் என்பதைவிட உண்மையாய் ஒரு நண்பரை மட்டும் கொள்வதே மேல் என்றும், தூய்மையான நட்பினால் துயரங்கள் தூசாகும், துன்பம் அகலும், இதயத்தில் மகிழ்ச்சியும் மதிப்பும் மேலோங்கும், இன்பத்தை இரட்டிப்பாக்கிக் கொடுக்கும் என்றும், எவ்வளவு தான் பணம் மனிதனிடத்து இருந்தாலும், உலகில் பல வற்றை வாங்கினாலும், உண்மையான நட்பினை ஒரு நாளும் விலைக்கு வாங்கிட முடியாது என்றும், எவன் ஒருவன் உற்ற நண்பனின் நட்புக்காக, உயர்வுக்காக உலகில் முயற்சிக்கிறானோ அவனை இறைவன் உயர்த்திடுவான் என்றும், நன்பனை எல்லோரிடத்திலும் பாராட்டிடுதல் சாலச்சிறந்தது, தக்கத் தருணம் வரும் போது தனியாயும் பாராட்டிச் சிறப்பி என்றும், நம் வாழ்க்கைக்கு உதவும் நல்லாசிரியர், நல்ல நண்பன், நல்ல வாழ்க்கைத் துணைவி இவைகள் மூன்றும் அமைந்திட்டால் அவை மிகப்பெறும் பேறாகும் என்றும், கருத்துள்ள நட்பானது கட்புலன் போன்றதுவாகும், இதனை உணருபவர் யாரோ? அதன் உண்மையை உணர்ந்திடுவாய் என்று நட்பின் உண்மையை உணர்வை உணர்த்துகிறார் ஆசிரியர்.

## இவைகள் வேண்டாம்

உலகில் நாம் வாழும் வாழ்வு சில காலமே என்றாலும் அவ்வாழ்வில் நாம் சிலவற்றைக் கடைபிடித்து வாழ்ந்து செல்வதே சாலச் சிறந்தது. எவைகள் தேவையோ அவற்றை மட்டும் செய்தல் வேண்டும். தேவையற்றவை ஒருபோதும் தேவையெனக் கொள்ளக் கூடாது.

இதனைப் பேராசிரியர் கா.கபுர் அவர்கள் பின்வருமாறு குறிப் பிடுகிறார். ஆராயாமல், ஆழம் தெரியாமல் எவற்றையும் செய்யக் கூடாது பேசவும் கூடாது. ஒன்று வராததாய் இருப்பின் அவற்றை எண்ணிவருத்தம் கொள்ளாதிருத் தலே நம் வாழ்வின் வளத்தைப் பெருக்கும் என்றும், நாம் அறியாத ஒருவனையும், நமக்கு அணுகாத ஒருவனையும் பற்றி புகழ்தலும் பழித்தலும் தவறு. நெறியோடு உலகில் வாழ்ந்திட நேர்மையானது வேண்டு மென்றும்,

நல்லோ ரிடத்தில் தீமைகளும்
தீயோ ரிடத்தில் நன்மைகளும்
மெல்ல உறைவதால் யார்குறையும்
மொழியா திருப்பாய்
பொன்மொழியே - பொ.மா.நா
(ப.எ 53)

நல்லவரிடம் சில தீமையும், தீயோரிடத்தில் சிறு நன்மையும் உறைவதை உணர்ந்தால் அதனை பிறருக்கு மொழிதல் தேவை யற்றது. வதி உலகில் நண்பர் களின் வாஞ்சையின் உறவில் இயலாதவர், முதியவர், எளியவர் யாரையும் முறித்திடுதல் நன்மை யன்று என்றும், நீ எதை பிறரிடத்தில் விரும்பாதிருக் கின்றாயோ, அதனை நீயும் பிறருக்கு செய்யாதிருத்தலே மிகவும் நல்லது. தாமதம் எதிலும் நல்லதல்ல அதாவது வீழ்ந்த பிணம் புதைக்காதிருப்பது, விதவைக்கு மறுமணம் புரியா திருப்பது, தொழுகை நேரம் இறைவனை வணங்கும் நேரத்தை தாமதம் கொண்டு செய்வது வேண்டாம் என்றும், விரும்பியது கிடைக்காவிடில் வீணாய் கவலை கொள்வதும், விரும்பியது வந்தும் ஒன்றாதிருந் தால் விசனம் கொள்ளுதலும் மிகுந்த கவலையைத் தரும். கவலை கொள்வதில் எவ்வித பயனுமில்லை, கவலை கொண்டால் அது கொண்டவர் உடலை கொள்ளும், பாதிக்கும் பகைவரை நம்கவலைகள் மகிழ் விக்கும், ஆகையால் கவலை களை அகற்றிடுக என்றும், சிறு சிறு இழப்புக்கு வருந்துவதும் பெரும் திட்டங்களை கெடுத்து அகற்றிவிடும். வீரன் வெற்றி பெற்றால் விண் புகழைப் பெறு கின்றான். இதுபோல் யாவரும் கவலை எல்லைகளை கடந்து விட்டால் அதுவே வெற்றி கொள்ளும் வெறியை உண்டாக் கிடும் என்று தேவையற்றவை களை தெளிவாக்குகிறார்.

## வாழ் நெறி

எப்படி வேண்டுமானாலும் வாழ்வதென்பது வாழ்க்கையா காது. இப்படித்தான் வாழ வேண்டும்மென்று ஒரு நெறியை வாழ்க்கையில் மேற்கொள்ளு தல் வேண்டும். அதுவே நமக்கு நன்மை பயக்கும். நான்கு பேருக்கு நம் வாழ்வை எடுத்துக் காட்டாக்கி நிற்கும். வாழ்வில் எவையெல்

லாம் நன்னெறிகள் என்று இறையருட்கவிமணி குறிப்பிட்டுள்ளார். அவையாவன, மிதமான உணவினை நாம் உண்டால் அவ்வணவு நம்மை வளப்படுத்திச் சுமக்கும். அதை விடுத்து மிதமாக இல்லாமல் அதிகமாக உண்டால் அவ்வுணவு தான் நம்மைச் சுமக்கும் நோய்களைக் கொடுத்து என்றும், அழகான மணம் வீசும் ரோஜா மலர்களை அள்ளும்போது அவற்றில் முட்களான துன்பம் இருக்கிறது என்பதை விட துன்பங்களான முட்களுக்கிடையில் ரோஜா போன்ற இன்ப மணம் வீசுகிறது என்றெண்ணி வாழ்வது மகிழ்வானது. மருத்துவர்கள் எதிலும் வன்மையான கரம் கொள்ளாது இருத்தல் நன்மை பயக்கும். மருத்துவர்கள் மங்கைக்குரிய மென்மையான கரத்தையும், மங்காத கழுகின் பார்வையினையும், சிங்கத்தின் கர்ஜனை நெஞ்சினை சிறப்பாகக் கொள்ளுதல் வேண்டுமென்றும், பெருகக் கேட்டதைஎல்லாம் சுருக்கி உரைத்தும், இருகாத இருவிழிகள் அமைத்தவனும் ஒருநாள் வளித்தான் போக வேண்டும் என்றும், இதழ்கள் பூட்டாகும் இதயப் பேழைக்கு நாவுதான் அதன் திறவுகோல் அதை உணர்தல் வேண்டும். நண்பனுக்கு அறிவுரைகளை அடுத்தவர் முன் மொழிவது விடுத்து தனிமையில் உரைத்தல் பயனாகும். எப்போதும் முடிவை அவரவரே எடுத்தல் நல்லது என்பதை,

> படியில் ஒன்றில் ஈடுபடப்
> பலரின் கருத்தைக் கேட்டறிவாய்
> முடிவில் நீயே சிந்தித்து
> முடிவை எடுப்பாய்
> பொன்மொழியே - பொ.மா.நா
> (ப.எ 66)

இவ்வாறு உணர்த்துகிறார். பேசாதிருப்பது எப்போதும் நல்லதல்ல பணம் திரட்ட அறிவிலியும் அறிந்திடுவான். ஆனால் அடைந்த பணத்தைச் செலவிட அறிவு வேண்டும் என்றும், ஒருவன் நம்மை குறை சொல்லும் போது நாமே நம்மீது ஐயம் கொள்வோம், ஆனால் அதனை விடுத்து எவனொருவன் நம்மைப் புகழ்கின்றானோ அவனை முதலில் ஐயுறுதல் வேண்டுமென்றும் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல நெறிகளை உரைத்துள்ளார் ஆசிரியர்.

## முத்துகள்

மனிதன் எவ்வளவு தான் பிற உயிர்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்றாலும் அவன் செய்யும் சில நிகழ்வுகள் பிற உயிர்களிடத்து விட தாழ்ந்தவனாக்கி விடுகிறது. கடலில் முத்துகள் பிறக்க எப்படி தூய்மையும் நீண்டகாலமும் ஆகிறதோ அதுபோல் தான் மனிதனும் தூய்மையை, கடை

பிடித்தால், மனிதனின் வாழ்வும் முத்துக்கள் போன்றாகும் என்பதனைக் கவிமணி அவர்கள் குறிப்பிகிறார். தவறு செய்வது மனித இயல்பு அதை உடனே ஒத்துக்கொண்டு தான் செய்த தவறுகளை உடனே திருத்திக் கொள்வது பெருமைக்குரிய ஒன்றாகும் என்றும், பிறரிடம் உள்ள குறைகளை நீ உன் கையின் ஒரு விரலால் சுட்டிக் காட்டும் போது உன்கையின் மூன்று விரல்கள் உன்னைச் சுட்டுவதையும் நீ அறிய வேண்டும் என்றும், கோழையாக வாழ்பவர்கள் இறக்கும் முன்னே பலமுறை இறந்திறந்தே எழுவர். சிறந்த வீரன் என்பவன் ஒரே ஒருமுறை சீர்பெற்று இறப்பான் என்றும், ஒருவர்க்கு பெருமைக்காக அதிகமான பொருள் கொடுத்து அவரிடம் நடித்து அவரின் அரும் பொருள்களைக் கவர்வது உலகில் இன்று அரசதந்திரமாகிக் கொண்டிருக்கிறது என்றும் காட்டுகிறார். நாம் விலங்கிற்கு எதையும் கற்றுக் கொடுக்க முடியாது. ஏனெனில் விலங்கினை விட மேலானவனாக நினைத்துக் கொள்ளும், மனிதன் தான் விலங்கிடமிருந்து மௌனத்தை கற்றுக்கொள்ள வேண்டும் என்றும், விழியினில் வெளிப்படுகின்ற பார்வையானது இயற்கையின் அற்புதம் அதனை மொழியால் விளக்கிட முடியாது என்றும், பகைவர்தாம் நமக்கு நல்ல மருத்துவர். அவர்கள் கூறும் குறைகளால் தான் நாம் பண்படுவோம் இதனால் இதயம் தானே பண்படும் என்றும், நட்பு எப்படிப்பட்டது என்பதனை,

> பந்தம் மிகுந்த உலகத்தில்
> பையில் இருக்கும் பணத்தைவிட
> சந்தையில் கிடைக்கும் ஒரு நண்பன்
> சாலச் சிறந்தவன் பொன்மொழியே
> - பொ.மா.நா (ப.எ 84)

என்றும், சால்பினை உடையவன் என்று தன்னை கருதாதிருப்பவன் சால்பு மிக்கோனாக இருப்பான். அவனிடம் சாந்தியும் இருக்கும் என்றும், அயலார்க்கு அளிக்கும் கண்ணியம் அவர்களின் உயர்வைக் காட்டும். ஆனால் உன்னுடைய உயர்வினை செயலால் காட்டிடுவாய் காட்டி உலகறியச் செய்வாய் என்று வாழ்க்கையில் நமக்குத் தேவையான நாம் செய்ய வேண்டுவனவற்றை அருமையான முத்துகளாக்கிக் கொடுத்து நம் வாழ்வினை நல் முத்துக்கள் கோர்த்த கைப்பட்ட மாலையாக மாற்றுகிறார்.

## முடிவுரை

மனித வாழ்வின் நிகழ்வுகள் உலகில் பலவற்றை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நிகழ்வும் ஏதோ ஒரு பயனையும்,

*பண்பையும் கொடுக்கிறது. பல அனுபவங்களும் கிடைக்கிறது. அனுபவங்கள் வாழ்வின் பரி மாணங்களை மாற்றுகிறது. இப்படி மாற்றம் பெறும் வாழ்க்கையானது மனிதனை அவனது எண்ணங்களை பலவாறாக மாற்றிப்போடுகிறது, இதனால் நிலையான வாழ்க்கை முறை முழுதும் மாறுகிறது. இந் நிலையில் மனிதன் இயல்பான வாழ்க்கை முறையையும் மன நிலையையும் பெற்று இன்புற்று வாழ இறையருட் கவிமணி பேராசிரியர் கா.அப்துல் கபுரின் இப்பொன்மொழி நானூறு ஒரு பொன்மாலை. வாழ்க்கையைக் கொடுத்து உலகில் உயர்த்தி நிற்கச் செய்கிறது.*

❐



**வி.ஜி.பி. உலகத் தமிழ் சங்கம் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக பாரிவேந்தர் மாணவர் தமிழ்மன்றம், கைத்தடி தமிழ், இலக்கியக் கூடுகை ஆகியவை இணைந்து நடத்திய இலக்கிய அகத்திணை விழாவில் டேனியல் தாமஸ் கல்வி நிறுவனத்தின் தாளாளர் ஜே.டி. சுபையார், கலை மாமணி மதுரை இளங்கவின், கவிஞர் சிவா, தமிழ்ப் பேராய செயலாளர் கரு. நாகராஜ் ஆகியோருக்கு இலக்கிய விருதினை வி.ஜி.பி. உலகத் தமிழ் சங்கம் தலைவர் வி.ஜி. சந்தோசம் வழங்கினார். அருகில் நடிகை சாவித்திரியின் மகள் விஜய சாமுண்டேஸ்வரி மற்றும் கைத்தடி தமிழ் இலக்கிய கூடுகையின் தலைவர் மு.ஞா.செ. இன்பா உள்ளார்**

# உமறு புலவரின் தலைமுறையில் "அல்ஹாஜி எச். அஹமது ருமைசுதின் ப்பைசீ"

நிறுவனர் கே.எம். புகார் அவர்களின் பேரன் என்ற பெருமைக்கு உரியவராய்த் திகழும் அவர்களுடன் சிறப்பு நேர்காணல்

*நேர்காணல் :*

**உமர் கத்தாபு**

*கட்டுரையாக்கம் :*

**முனைவர் மோ. பாட்டழகன்**

---

*தமிழ் இலக்கிய வரலாற்றில் 13ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை பெருங் காப்பியங்கள் படைக்கப்பட வில்லை. 17-ஆம் நூற்றாண்டில் சீறாப்புராணம் எனும் பெருங் காப்பியத்தைப் படைத்து தமிழில் பெருங்காப்பியங்கள் தோன்ற வழிகாட்டியவர் உமறுபுலவர். இசுலாமிய மரபுகளைப் போற்றி நபிகள் நாயகம் வரலாற்றை தமிழ்ச் சமூகத்திற்கு வழங்கிய உமறுபுலவரின் 11-ஆவது வாரிசு திரு. ஏ.எஸ். ஹமிது. அவர்களின் மகனார் திரு. ருமைசுதின் பைசி அவர்கள். புகாரி உணவகத்தில்...*

**1. ஐயா உமறுபுலவரின் வழியில் வந்தவர் நீங்கள் என்பதை அறிந்து மகிழ்கிறேன். தங்களைப் பற்றின அறிமுகத்தை கூறுங்கள் :**

திருநெல்வேலி மாவட்டத்தில் டவுன் பிளான் முறையில் உருவாக்கப்பட்ட கேம்லாபாத் கிராமத்தில் பிறந்தேன். என் தந்தை எ.எஸ். ஹமீது. தாயார் சுபைதா பேகம். மூன்று சகோதரி, ஒரு சகோதரர், ஒரு தங்கை என என்னுடன் பிறந்தவர்கள் ஐந்து பேர். பள்ளி படிப்பைத் திருநெல்வேலி கான் வென்டிலும் கல்லூரிப் படிப்பை சென்னைப் பல்கலைக் கழகத்திலும் படித்தேன்.

**எப்படி நீங்கள் உமறு புலவரின் வாரிசாக வருகிறீர்கள் என்பதை விளக்க முடியுமா?**

உமறுபுலவரின் மூதாதையர்கள் அபுபக்கர் சித்திக் ரலி அவர்களின் வம்சத்தை சார்ந்த அப்துல்லா மனைவி கதிஜா. இவர்கள் வழிவந்த ஷேக் பருத்தின் என்பவர். அத்தர் வணிகம் செய்ய அரபு நாடுகளில் இருந்து கோழிக்கோடு வந்திறங்கி பின்னர் திருநெல்வேலி பேட்டையில் குடியேறினார்கள். திரு. ஷேக் பருத்தின் மகனார் செய்கு முகம்மது அலி



அவர்கள் தந்தையின் தொழிலான வாசனை திராவியங்கள் ஜவ்வாது அத்தர் போன்ற நறுமண பொருட்களை எட்டையபுரம் மன்னரிடம் வழங்கினார்.

இவருடைய நற்பண்புகளையும், அறிவுச் கூர்மையையும் கண்ட மன்னர் எட்டையபுரத்திலேயே குடியமர்த்திவிட்டார்.

ஷேக் முகம்மதலிக்கு திருமணம் செய்வதற்கு எட்டையபுரத்தில் இசுலாமிய பெண் இல்லாத காரணத்தினால் பிராமண பெண்ணை இசுலாமியத்துக்கு மாற்றி மண முடித்தனர்.

இவர்களின் இனிய இல்லறத்தின் பயனாக கி.பி. 1463 அக்டோபர் 23-ஆம் நாளன்று உமறு புலவர் பிறந்தார்.

எட்டையபுரம் அரசவைக் கவிஞரான கடிகை முத்துப் புலவரிடம் தமிழ் படித்து புலமை பெற்ற மாணவராக இளமையிலயே திகழ்ந்தார் உமறுபுலவர்.

எட்டையபுர அரசவைக்கு வந்த வடநாட்டு புலவர் வாழை வருதியோடு கவிதைப் போட்டியில் வென்ற உமறுபுலவர் தமது 16-ஆம் வயதிலேயே எட்டையபுரத்து ஆஸ்தான புலவரானார்.

கீழைக்கரையில் வாழ்ந்த வள்ளல் சீதக்காதி மரைக்காயர் வணிகமுறை பயணமாக எட்டையபுர மன்னரைக் காண வந்தபோது உமறு புலவரின் புலமையை உணர்ந்தார்.

வள்ளல் சீதக்காதியின் நீண்ட நாள் கனவான நபிகள் நாயகத்தின் வரலாற்றினை காவியமாக்கும் ஆற்றல் உமறு

புலவருக்குண்டு என்பதை அறிந்து எட்டையபுர மன்னரின் அனுமதியுடன் புலவரை தன்னுடன் கீழைக்கரைக்கு அழைத்துச் சென்றார்.

காவியமாக்குவதற்கு வேண்டிய நபிகள் நாயகத்தின் வரலாற்றுச் செய்திகளை அரபிய மொழி புலமை பெற்ற கீழைக் கரை சதக்கத்துல்லா அப்பாவிடம் கேட்டு, தெளிந்து 'சீறாப் புராணம்' எனும் காப்பியத்தை உமறு புலவர் படைத்தார்.

பரங்கிப்பேட்டை அபுல் காசிடம் மரைக்காயர் அவர்களின் நிதி உதவியுடன் சீறாப் புராணம் முற்றுப்பெற்று அரங்கேற்றம் பெற்றது.

உமறு புலவருக்கு 4 பெண் மக்களும், 2 ஆண் மக்களும் பிறந்தனர். மூத்த மகள் பெயர் சம்சுதின், இரண்டாவது மகள் நுகூ. இவருடைய வழி வந்தவர்கள் 3வது தலைமுறை.

எட்டையபுரத்தை விட்டு திருநெல்வேலி மாவட்டத்தின் தாமிரபரணி ஆற்றுப் படுக்கையில் வந்து குடியேறினர். இவருடைய பெயரும் நுகூ தான்.

தம்முடைய முப்பாட்டனார் பெயரைக் கொண்டு நுகூ வீட்டுக்காரர் என்று அழைக்கப் பட்டார்.

இவருடைய மகனார் பீர்கண்ணு. அவரின்மகள் அகம்மது சாகிப் அவருடைய மகன் எ.எஸ். ஹமீது. இவர் தான் என்னுடைய தகப்பனார். அதாவது உமறு புலவரின் 11ஆவது வாரிசு ஆவார்.

இத்தகவலை என் தந்தையார் வாயிலாகவும், எந்த தந்தையின் சிறிய தகப்பனார் வாயிலாகவும், உமறு புலவரின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து சீராய்வு செய்து தங்களுக்கு தெளிவுப் படுத்துகிறேன்.

**★ சென்னை அண்ணா சாலையில் புகழ்பெற்று விளங்கும் புகாரி உணவகத்தின் உரிமை யாளர் எ.எம். புகாரி அவர்கள் உங்கள் தாத்தாவா?**

ஆம் அவர் என்னுடைய தாத்தா. எ.எம். புகாரி அவர்களின் இரண்டாவது அக்கா மகன் தான் என்னுடைய அப்பா திரு. எ.எஸ். அமீது. தாய்மாமன் மகளான என் அம்மா சுபைதா பேகத்தை மணமுடித்தார்.

என் அப்பா பி. பார்மஸி படித்தவர். 1951-இல் என் தாத்தா கே.எப். புகாரி அண்ணா சாலையில் புகாரி உணவகத்தை ஆரம்பித்தபோது என் அப்பா அந்த உணவகத்துக்கு அருகில் மருந்து கடை நடத்தி வந்தார்.

2 ஆண்டுகளுக்கு பிறகு புகாரி உணவகம் பல கிளைகளாக உருவாகிய நேரத்தில் மருந்து கடையை மூடிவிட்டு என் தாத்தாவிற்கு

உதவியாக புகாரி சன்ஸ் என்ற நிறுவனத்திற்கு இயக்குநராகப் பொறுப்பேற்றார்.

**★ உமறு புலவரின் வாரிசுகளின் வழியில் தமிழார்வமும் புலமையும் கொண்டவர்கள் எவரேனும் இருந்திருக்கிறார்களா?**

என் தந்தை சிறந்த இலக்கியவாதி. திருநெல்வேலி செயின்ட் சேவியர் கல்லூரியில் படித்த போதே பல கதைகளும் கட்டுரைகளும் எழுதி வந்தார்.

இவருடைய புலமையாற்றலைப் பாராட்டி, புலவர் இப்ராகீம் என்பவர் 'உமர் கிளையோன்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளார்.

சென்னை எழும்பூரில் உள்ள இம்பிரியல் உணவகத்தில் பல நூல் வெளியீட்டு விழா நடைபெறுவதற்கு உதவிக்கரமாக இருந்து தமிழ் வளர்ச்சிக்கு முனைப்புடன் என் தந்தையும் தாத்தாவும் செயல்பட்டனர்.

**★ உணவக வணிக வரலாற்றில் மிகப் பெரிய புரட்சிகளை உருவாக்கிய முன்னோடி கே.எம். புகாரி உங்கள் தாத்தா தான். அவருடைய சாதனைகளை தெரிந்து கொள்ளலாமா?**

தாமிரபரணி ஆற்றக் கரையோரம் அருகில் உள்ள ஏறல் மற்றும் ஸ்ரீவைகுண்டம் என்ற பெரு ஊர்களுக்கு நடுவில் உள்ள சங்குநாதபுரம் என்ற குக்கிராமத்தில் பிறந்தவர் ஆறு வயதில் இலங்கை சென்று கண்டி என்ற நகரில் கல்வி கற்றார்.

அதன் பின்னர் பத்தொன்பதாம் வயதில் இலங்கையில் பெரும் வணிகரான எம்.எம். முத்துலாப்பா அவர்களின் மூத்த மகளை மணந்து கொண்டு இலங்கையிலேயே தன் மாமாவுடன் ஓட்டல் தொழிலைக் கவனித்து வந்தார்.

சிறிது காலத்திற்கு பின் லாப்பா ஸ்டோர் என்ற கடையை ஆரம்பித்து முதலாளி ஆனார். இலங்கையில் தொழில்செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லாததால் இந்தியர்களை அன்றைய ஆட்சியாளர்கள் தாயகத்திற்குத் திரும்பி அனுப்பினர். அவ்வாறு இலங்கையில் இருந்து தாயகத்திற்கு திரும்பவர்களில் என் தாத்தாவும் ஒருவர்.

**★ சென்னையில் புகாரி உணவகத்தை எப்போது தொடங்கினார்?**

1951-ஆம் ஆண்டு சென்னை அண்ணாசாலையில் முதல் ஓட்டல் நிறுவனத்தை தொடங்கினார். அதன்பிறகு சைனா பஜார், எழும்பூர், மெரினா பீச் மற்றும் சென்டிரல் ஆகிய பகுதிகளில் புகாரி ஓட்டல் கிளைகள் விரிவடைந்தது.

**★ ஓட்டல் தொழிலில் உங்கள் தாத்தா செய்த புரட்சிகள் என்ன?**

அயல்நாட்டில் உள்ள ஓட்டல் களுக்கு இணையான சூழ்நிலை யை முதன்முதலில் ஓட்டல் தொழிலில் உருவாக்கியவர் என் தாத்தா. ஓட்டலில் பணியாற்றும் அனைவருக்கும் சீருடை வழங்கியவர். உணவு உண்பதற்கு பீங்கான் பிளேட், கண்ணாடி குவளை என மேற்கத்திய நாகரிகச் சூழலை இங்கே உருவாக்கிக் காட்டினார்.

சென்னையில் துவங்கப்பட்ட முதல் நட்சத்திர ஓட்ட எழும்பூரில் உள்ள இம்பிரியல். குளிர்சாதனம் பொருத்தப்பட்ட முதல் உணவகம் மற்றும் தங்கும் அறைகள் ஆகியவற்றை உருவாக்கினார். மேலும் கிழக்கு கடற்கரைச் சாலையில் ''புகாரி புளூலகுன்'' என்ற கடற்கரை விடுதியை அமைத்தார்.

டெல்லியில் உள்ளது போல் சாலிமார் கார்டன் என்ற பெயரைச் சூட்டி பூங்காவோடு உணவு விடுதியை தொடங்கினார். சனி, ஞாயிறுகிழமைகளில் 60 எம்எம், புராஜெக்டர் மூலம் ஆங்கில படங்களைத் திரையிட்டு முதல் திறந்தவெளி திரையரங்கை சென்னையில் அறிமுகப்படுத்தினார்.

**★ வணிகத்தில் மட்டுமின்றி சமூக நலப் பணிகளிலும் உங்கள் தாத்தா பங்கேற்றுள்ளார். அது பற்றி தெரிந்து கொள்ளலாமா?**

சாதி மதம் என்ற வேறுபாடு களை பார்க்காமல் அனைத்து விழாக்களுக்கும் இடம் கொடுத்தார். குறிப்பாக பல நூல் வெளியிட்டு விழாக்களும், இலக்கிய நிகழ்ச்சிகளும் இம்பிரியல் உணவகத்தில் நடைபெற்றுள்ளது. பல ஏழை மாணவர்கள் கல்வி கற்க உதவினார். அவர் செய்த பல தர்மங்கள் அருகில் இருந்த எங்களுக்கு கூட தெரியாது.

1972-73 வரை சென்னை மாநகர செரிப்பாகவும் இருந்தார்.

**★ உங்கள் இலட்சியம் என்ன? எங்கள் வாசர்களுக்கு தாங்கள் தெரிவிக்கும் செய்தி என்ன?**

புகாரி குழுமத்தின் இயக்குநராக இருக்கும் நான் வணிகத்தில் மட்டுமின்றி இலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடு உடையவன். உமறுபுலவர் பெயரில் அறக் கட்டளையை தொடங்கி பல இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறேன். தமிழ்மொழி வளர்ச்சிக்கு தாத்தாவின் வழியில் தொடர்ந்து பணி செய்ய வேண்டும் என்பதே என் விருப்பம். மாணவர்களும் இளைஞர்களும் தாய்மொழி உணர்வோடு செயல்பட வேண்டும்.

❐

# பொதுமறை உணர்த்தும் பொதுவான மறைகள்

முனைவர். **மோ.ஜ. மகேஸ்வரி,**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி
(தன்னாட்சி),

**முன்னுரை**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றியன இதில் பதினொரு நூல்கள் நீதி நூல்களாகும். இந்நூல்களில் சிறந்தது திருக்குறளாகும். வள்ளுவர் மனித வாழ்விற்குத் தேவையான அத்துணை அறக் கருத்துக்களையும் இரண்டடி யில் பதிவு செய்துள்ளார். இந்நூல் சாதி, மதம், மொழி, இனத்திற்கும் அப்பாற்பட்டு பொதுவான கருத்துகளை எடுத்தியம்புகிறது. இந்நூல் உணர்த்தும் பொதுவான மறைகள் எவை என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**இறைவன்**

எந்தச் செயலைத் தொடங் கினாலும் அதற்கு இறைவனை வழிபடுதல் என்பது நம் பழக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. இறைவன் இல்லை யெனில் இவ்வுலகில் ஓர் அணுவும் அசையாது



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்ற குறள் வழி உலகம் இறைவனை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது என்றும் அனைத்து உயிர்களும் இறைவனது படைப்பு என்பது புலனாகின்றது.

**மழையின் சிறப்பு**

மழை பொய்த்துவிட்டது என்றால் நம் வாழ்வும் பொய்த்து

விடும். மழை பொழிய வேண்டும் என்றால் நாம் மரக் கன்றுகளை நட வேண்டும். மழையில்லை என்றால் நாம் சேற்றிலும் கால்வைக்க முடியாது. சோற்றிலும் கைவைக்க முடியாது.

**தானம் தவம் இரண்டும் தங்கா**
**வியன் உலகம்**

**வானம் வழங்காதெனின்**

என்ற குறள் வாயிலாக வள்ளுவர் தானமும் தவமும் செய்ய மழை அவசியம் என்றுரைக்கிறார். மழை நீரை நாம் சேமித்து வைக்க வேண்டும். நிலத்தடி நீரை குறையாமல் பார்த்துக்கொள்வது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகக் கொள்ள வேண்டும்.

## இல்வாழ்க்கை

இன்றைய உலகில் அன்பு என்பது தேவையான ஒன்றாக விளங்குகிறது. இந்த இல்வாழ்க்கையில் பணமிருந்தால் அன்பு தானாக வருகிறது. பணமில்லையென்றால் அன்பு தானாகவே குறைந்துவிடுகிறது. மனித வாழ்வில் அன்பும் அறமும் குறைந்துவிட்டால் இன்பமும் குறைந்துவிடும். அதனால் தான் வள்ளுவர்,

**அன்பும் அறனும் உடைத்தாயின்**
**இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது**

என்றுரைத்துள்ளார்.

## மக்கட்பேறு

உலகம் விஞ்ஞானத்தில் அதிவேகமாக வளர்ச்சி பெற்று வந்தாலும் பெரும்பான்மையான குடும்பங்களில் குழந்தைப் பேறின்மை மிகுந்து காணப்படுகின்றது. இதற்குக் காரணம் உரம் கலந்த உணவு, கரு காலதாமதமான திருமணம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இன்றைய பெற்றோர்கள் தன் பிள்ளைகள் ஒழுக்கத்தோடும், பண்பாட்டோடும் வளர்கின்றனரா என்று பார்க்காமல் நன்றாகப் படிக்க வேண்டும் நல்ல பணிக்குச் செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்**
**தன் மகனைச்**

**சான்றோன் எனக்கேட்ட தாய்**

என்னும் குறளில் வள்ளுவர் தாயின் இன்பம் எதுவென்றால் தன் மகன் சான்றோன் என்று கேட்பதில்தான் இருக்கிறது என்கிறார்.

## விருந்தோம்பல்

சங்ககால மக்களின் தலையாய கடமைகளுள் ஒன்றாக விருந்தோம்பும் பண்பு விளங்குகிறது. ஆனால், இன்றோ பொருளாதார நெருக்கடி காரணமாக இல்லத்திற்கு உறவினர்களுக்கு உணவு அளிப்பதையும் முகமலர்ச்சியுடன் வரவேற்பதும் அரிதாகிவிட்டது. வள்ளுவர்

விருந்தினர் வைத்துக் கொண்டு தான் உண்பது சாவா மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று என்கிறார். இத்தகையப் பண்பு கூடாது என்பதற்கு கீழ்வரும் குறள் எடுத்தியம்புகிறது.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்ற

## ஒழுக்கம்

இன்றைய காலகட்டத்தில் தனிமனித ஒழுக்கம் குறைந்து வருகிறது. இதற்குக் காரணம் ஊடகங்கள்தான் என்று உறுதி யாகக் கூறமுடியும். கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் போன்றவை பெருகுவதற்கு நவீன கருவிகளின் வளர்ச்சி மேலை நாட்டுத்தாக்கம், இல்லத்தில் அன்பின்மை, பாச மின்மை ஆகியவற்றை குறிப்பிட லாம். ஒருவருக்கு ஒழுக்கம் உயிரை விடச்சிறந்தது என்பதை,

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்

என்கிறார் வள்ளுவர்.

## பிறனில் விழையாமை

இராமாயணத்தில் இராவணன் இராமனின் மனைவி சீதையை நயந்ததால் அரக்கர் குலமே அழிவதற்கு காரணமாக அமைந்தது. இன்று கள்ளத்தொடர்பு காரணமாக பல குடும்பங்கள் நடுத்தெருவிற்கும் சிறைக்கும் செல்வதை கண்கூடாகப் பார்க்கிறோம். வள்ளுவர்,

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு

என்ற குறளில் பிறர் மனைவி விரும்பி நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறம் மட்டுமன்று ஒழுக்கமாகும் என்கிறார்.

## ஈகை

கொடையில் சிறந்தவர்கள் கர்ணன் மற்றும் கடையெழு வள்ளல்களாவர். பிரதிபலன் எதிர்பார்க்காமல் இருக்கின்றவர் இல்லாதவர்களுக்குக் கொடுப்பது கொடையாகும். கொடையைத் தானம் என்று கூறலாம். அன்று புரவலர்கள் புலவர்களுக்கு பொன்னும் பொருளும் நிலமும் தானமாகக் கொடுத்தார்கள். இன்று பல நல் உள்ளங்கள் அன்னதானம், இரத்ததானம், கண்தானம், உறுப்புதானம், குழந்தைதானம் போன்றவற்றை விளம்பரம் இல்லாமல் செய்து வருகின் றார்கள். வள்ளுவர் ஈகை என்பது,

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து

என்றுரைக்கின்றார்.

## புலால் உண்ணாமை

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று எண்ணினால் புலால் உணவை உண்ணக் கூடாது. மாமிசத்தினால் இரத்த அழுத்தம், கொழுப்பு மாரடைப்பு போன்றவை ஏற்படுகிறது. மேலும், உயிர்பலி நம்மை நரகத்தில் தள்ளிவிடும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே வள்ளுவர் மாமிசம் உண்ணக் கூடாது என தம் குறளில் அறிவுறுத்தி யுள்ளார்.

**கொல்லான் புலாலை**

**மறுத்தானைக் கை கூப்பி**

**எல்லா உயிரும் தொழும்**

என்ற குறளில் உயிரைக் கொல்லாமல், புலால் உண்ணா மல் இருப்பவரை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் வணங்கும் என்கின்றார்.

## நிலையாமை

வாழ்க்கை நிலையில்லாதது. வாழ்வில் ஈடுபடும் மனிதர்கள் நிலையில்லாதவர்கள். இயற்கையாகிய நிலம், நீர், காற்று, வானம், சூரியன், சந்திரன், மலை போன்றவை நிலையானவை. நம் பிறப்பு இறப்பு பற்றிக் கூறும்பொழுது,

**உறங்கு வதுபோலும் சாக்காடு**

**உறங்கி**

**விழிப்பது போலும் பிறப்பு**

என்கிறார். நாம் வாழ்கின்ற காலத்தில் மற்றவர்களிடம் அன்புடனும், பண்புடனும், பாசத் துடனும் விட்டுக் கொடுத்தும் வாழவேண்டும். வாழ்வது ஒருமுறை என்பதை மனதில் நினைத்தோம் என்றால் இல்லத்தில் சண்டை சச்சரவுகள் இருக்காது.

## கல்வி

கல்வி கரையில கற்பவர் நாள்சில என்ற பொன் மொழிக்கேற்ப கல்வியை நாம் வாழ்நாள் இறுதிவரையிலும் கல்வியைக் கற்கலாம். ஆனால், நாம் வாழும் நாளே குறைவு. எல்லாச் செல்வங்களும் அழியக் கூடியது. ஆனால், கல்விச் செல்வ மானது அழியாதது. மனிதன் மறையும் வரை கூடயிருப்பது கல்வி என்பதனை,

**கேடில் விழுச் செல்வம் கல்வி**

**ஒருவற்கு**

**மாடல்ல மற்றை யவை**

என்று வள்ளுவர் குறளில் பதிவுசெய்துள்ளார்.

## நட்பு

சிறந்த நட்புக்கு இலக்கண மாக அதியமான் ஔவையார், கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார், துரியோதனன் கர்ணன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். அன்று நண்பனுக்காக உயிரைக் கொடுப்பவர்கள் இருந்தார்கள். இன்று உயிரை எடுக்கின்ற நண்பர்கள்தான் அதிகம் இருக்கின்றார்கள். பணம் உள்ளவர்களிடம் நட்பு வட்டம் பெரிதாக இருக்கும். பண

மில்லாதவர்களிடம் நட்பு குறைவாக இருக்கும். நட்பு என்பது சிரித்து மகிழ்வது மட்டுமல்ல. தவறு செய்கின்ற பொழுது இடித்துரைக்க வேண்டும் என்பதனை,

நகுதற் பொருட்டன்று நட்டல்
மிகுதிக்கண்

மேற்சென்று இடித்தற் பொருட்டு

எனும் குறள் வழி வள்ளுவர் எடுத்தியம்புகின்றார்.

## கள்ளுண்ணாமை

வாழ்வினை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்வது மது மாது மாமிசம் ஆகும். அரசு ஒழிக்க வேண்டிய டாஸ்மார்க் கடையை அரசே இன்று நடத்தி வருகிறது. இதனால் படித்த படிக்காத இளைஞர்கள் முதியவர்கள் என எத்தனையோ மக்களின் குடும்பங்கள் சீரழிந்து வருகிறது. கள்ளுண்பவர் பகைவர்களுக்கும் அஞ்சமாட்டார்கள் தம் புகழுக்குப் பழிவந்தாலும் கலங்க மாட்டார்கள். இதனை,

உட்கப் படாஅர் ஒளியிழப்பர்
எஞ்ஞான்றும்

கட்காதல் கொண்டொழுகு வார்

என்று வள்ளுவர் கள்ளுண்பதால் ஏற்படும் தீங்கினை மொழிகின்றார்.

## உழவு

இந்த உலகில் ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவுமேயில்லை என்றே கூறலாம். நம் நாட்டின் முதுகெலும்பு விவசாயிகள் தான். தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக தஞ்சாவூர் விளங்கியது. ஆனால், இன்றோ மழையின்மை, தண்ணீர்ப் பிரச்சனை, மீத்தேன் எடுத்தல் போன்ற சிக்கல்களால் விவசாயத் தொழில் அழிந்து வருகிறது. கவிஞர் வைரமுத்து விவசாயம் அழிந்து மாத்திரையே உணவாக பயன்படுத்தும் காலம் வரும் என்று கூறியுள்ளார். உழவுத் தொழில் எல்லாத் தொழிலுக்கும் முதன்மையானது என்பதை,

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்
அதனால்

உழந்தும் உழவே தலை

என்ற குறள் வாயிலாக விவசாயத்தின் மேன்மையைச் செப்புகின்றார்.

## நிறைவுரை

வள்ளுவர் கூறியுள்ள பொது மறை அனைவருக்கும் பொதுவான மறையாகும். இந்நூல் சாதி, மதம் மொழி இனம் கடந்து அனைவருக்கும் பொதுவான மறைகளைக் கூறுகின்றது. மேலே சொல்லப்பட்ட குறள்கள் என்னைச் செதுக்கிய தோடு மட்டு மல்லாமல் அனைவரையும் செதுக்கக்கூடிய நூல் என்று சொன்னால் மிகையாகாது. நாம் வள்ளுவம் கருத்து வழி வாழ்ந்தோம் என்றால் வாழ்வில் இன்பம் பெருகும். துன்பம் விலகும்.

❐

# தமிழக அரசு மலேசிய அரசுடன் இணைந்து

## மலேசியத் தமிழாசிரியர்களுக்கு சென்னையில் நடத்திய பயிற்சி

### செய்தி : முனைவர் மோ. பாட்டழகன்

மலேசிய தமிழ் ஆசிரியர் களுக்கு சென்னையில் பயிற்சி அளிக்கும் திட்டடத்தை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் தொடங்கி வைத்தார்.

மலேசிய ஆசிரியர்கள் 42 பேருக்கு தமிழகத்தில் முதல் கட்டமாக ஒரு வாரம் பயிற்சி அளிக்க தமிழக அரசும், மலேசிய அரசும் முடிவு செய்தது. அதன் படி சென்னை எழும்பூரில் உள்ள வெஸ்டன் பார்க் நட்சத்திர உணவகத்தில் 7 நாட்கள் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டது. மலேசிய ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் தொடக்க விழாவில் மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குனர் க.அறிவொளி வரவேற்றார். பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தலைமை தாங்கி பயிற்சியைத் தொடங்கி வைத்தார். விழாவில் கே.ஏ.செங்கோட்டையன் பேசியதாவது:-

**வரலாற்று நிகழ்ச்சி**

இது ஒரு வரலாற்று நிகழ்ச்சி. தமிழக அரசும், மலேசிய அரசும் இணைந்து மலேசிய ஆசிரியர் களுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் பயிற்சி தொடங்கப் பட்டுள்ளது. மலேசியாவில் ஏராளமான தமிழர்கள் வாழ் கிறார்கள். அந்த அரசு தமிழர் களை அங்கீகரித்து உள்ளது. பள்ளிக்கல்வித் துறை பல

மாற்றங்களை செய்து வருகிறது. புதிய பாடத்திட்டம் தயாரிக்கப் பட்டு அடுத்த கல்வி ஆண்டில் கொண்டு வரப்படுகிறது.

பிளஸ்-2 முடித்தவுடன் வேலை கிடைக்கும் உத்தர வாதத்தை புதிய பாடத்திட்டம் கொடுக்கும். தமிழகத்தில் 8 புதிய நூலகங்கள் தொடங்கப் பிளஸ்-2 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் தமிழ் படிக்க என்ன தேவையோ அதற்கான பாடப் புத்தகம் உள்ளிட்டவைகளை வழங்க திட்டம் உள்ளது.



பட உள்ளன. நீட் என்கிற நுழைவுத்தேர்வுக்கு தமிழகத் திற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்பதில் மாற்றம் இல்லை. நீதி மன்றத்தில் இதுகுறித்து வழக்கு உள்ளது. இருப்பினும் 412 மையங்களில் மத்திய அரசு கொண்டு வரும் போட்டித் தேர்வை எதிர்கொள்ள

இவ்வாறு கே.ஏ.செங்கோட்டையன் பேசினார்.

## மலேசிய அமைச்சர் டத்தோ. ப. கமலநாதன்

விழாவில் மலேசிய கல்வி துணை அமைச்சர் டத்தோ

ப.கமலநாதன் பேசும்போது, மலேசியாவில் இப்போது 524 தமிழ் பள்ளிக்கூடங்கள் உள்ளன. இந்தப் பள்ளிகளில் ஒரு லட்சம் மாணவ - மாணவிகள் படிக்கிறார்கள். 10 ஆயிரம் ஆசிரியர்கள் பணியாற்று கிறார்கள். தமிழ் ஆசிரியர் களுக்கு மலேசியா சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகளுக்கு பிறகு முதல்முறையாக தமிழகத் தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்கு எங்கள் பிரதமர் தமிழில் கையெழுத்திட்டு பெருமைப் படுத்தினார் என்றார்.

மலேசிய நாட்டு தூதர் சரவணன் கார்த்திகேயன், துணைத்தூதரக அதிகாரி அப்துல் ரகுமான், முன்னாள் எம்.பி. பாலகங்கா, பள்ளிக்கல்வி இயக்குனர் ரெ.இளங்கோவன், இடைநிலை கல்வி இயக்குனர் வி.சி.ராமேஸ்வர முருகன், தொடக்க கல்வித்துறை இயக்குனர் எஸ்.கருப்பசாமி, இணை இயக்குனர் லதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பயிற்சி பெற்ற மலேசிய தமிழாசிரியர்களின் சார்பாக மலேசிய கல்வி அமைச்சகத்தின் உதவி இயக்குநர் சு. அகிலன் நம் செய்தியாளரிடம் தெரிவத்தது :

‘‘எங்கள் மலேசிய அரசுடன் இணைந்து தமிழக அரசு எங்கள் தமிழாசிரியர்களுக்குக் கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆளுமைப் பயிற்சியை வழங்கியது. வரலாற்றில் இதுவே முதன் முறை.

‘‘பாடத் திட்டங்களை மூன்று பருவங்களாகப் பிரித்து வடிவமைக்கும் முறையை இங்கே தெரிந்து கொண்டோம். எங்கள் நாட்டின் பாடப் புத்தகங்களை மாணவர்களுக்கு இரவலாக வழங்கும் முறை உள்ளது. மலேசியாவில் எல்லா வசதிகளுடன் மாணவர்கள் கல்வி கற்கும் நிலை இருந்தாலும் சில நேரங்களில் ஏற்படும் சிக்கல்களைத் தன்னம்பிக்கை யுடன் தீர்வுகண்டு முன்னோக்கிப் பயணிக்கிறோம்.

‘கதை-கவிதை-கட்டுரை’ போன்ற படைப்பிலக்கியங் களை படைக்கும் திறன் குறித்த உத்திகளையும் இலக்கண நுட்பங்களையும் இப்பயிற்சியின் மூலம் அறிந்தோம். இலக்கணம் - இலக்கிய வரலாறு பண்பாடு போன்ற துறை சார்ந்த அறிஞர் பெருமக்கள் ஆற்றிய உரைகள் மிகுந்த ஊக்கத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தின.

‘‘கற்றல்-கற்பித்தல்-திறன்’’ குறித்து நேரடி கள ஆய்வாக காஞ்சிபுரம் திருவள்ளுவர் மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்குச் சென்றோம். ஏழை மாணவர்கள் கல்வியின் மீதுள்ள பற்றால் கல்வி கற்கும் அணுகுமுறையையும் அரசு அவர்களுக்காகச் செயல் படுத்தும் திட்டங்களையும் கண்டு புதிய அனுபவங்களை பெற்றோம்.

‘‘தொழில்நுட்பத்தின் பயனாகக் கல்வி கற்கும் சூழல்’’ (Smart Class) ஆக மாறி உள்ள நிலையை நேரில் காணும் வாய்ப்பு கிடைத்தது பெரும் மகிழ்ச்சியை அளித்தன.

‘‘தமிழக அரசும் அலுவலர்களும் முதல் நாள் முதல் கடைசி நாள் வரை இப்பயிற்சித் திட்டத்தை மிகப் பெரிய குழுவாகச் செயல்பட்டுச் சிறப்பாகச் செயல்படுத்தினர். இப்பயிற்சித்திட்டம் ஆண்டுதோறும் செயல்படுத்தப் பட்டால் மலேசியக் கல்வியியல் துறையில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கும்.’’

மலேசியக் கல்வி அமைச்சகத்தைச் சேர்ந்த மற்றொரு உயர் அலுவலர் திரு. குமரன் கோரன் அவர்கள் தெரிவித்தது.

‘‘1816ஆம் ஆண்டு அக்டோபர் 21-ஆம் நாள் பினாங்கில் உள்ள பள்ளியில் முதல் தமிழ் வகுப்பு தொடங்கப்பட்டது. இருநூறு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் அதன் தொடர்ச்சியாக மலேசியத் தமிழாசிரியர்களின் தமிழறிவை மேம்படுத்துவதற்கு தமிழகஅரசு எங்கள் அரசுடன் இணைந்து செயல்படுத்தியுள்ள இப்பயிற்சித் திட்டம் சொற்களால் சொல்ல முடியாத அளவிற்கு மிகுந்த பயனை அளித்துள்ளது. தமிழ்ப்பண்பாடு வரலாறு தொடர்பான பல்வேறு செய்திகளை அறிஞர்கள் தந்த கருத்ரையில் அறிந்தோம். நேரடி கள ஆய்வுகள் கற்றல் - கற்பித்தலின் நுட்பங்களை வெளிப்படுத்தின. எங்கள் உள்ளத்தையும் உணர்வையும் இப்பயிற்சி பண்படுத்தின என்றால் அது மிகையாகாது. நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்து மிகவும் சிறந்த முறையில் நெறிப்படுத்திய தமிழக அரசு அலுவலர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி.

❒

# பாரதப் போரில் கர்ணன்

முனைவர் இ.சா. பர்வீன் சுல்தானா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நீதிபதி பஷீர் அகமது மகளிர் கல்லூரி,
சென்னை.

கர்ணன் மகாபாரதத்தின் விசித்திரமான கதாபாத்திரங் களில் ஒருவனாக திகழ்கிறான்.

மாபெரும் அரசியல் நுட்பங்களும், வஞ்சகங்களும், மர்மங்களும், கதை நுணுக்கங் களாக பின்னப்பட்ட காலத்தை வென்று நிலைத்து நிற்கும் கதாபாத்திரங்களை கொண்டதாக திகழ்கிறது மகாபாரதம்.

வியாசர் தொடங்கி வில்லிபுத்தூரார் வரை தர்ம சிந்தனைகளையும், சத்திய சோதனைகளையும், நேர்மையின் சிறப்பையும், தியாகத்தின் மாண்பையும், தாயின் பேரன்பையும், போர் வீரத்தின் எழுச்சியையும் ,அழகுற படைத்திருக்கும் பாரதம் கர்ணனுக்கு தனிச் சிறப்பு செய்வதுடன் கதையின் போக்கில் கர்ணனின் உயர்ந்த குணங்களையும் கீழான குணங்களையும் வெளிப் படுத்தி, மிகச் சிக்கலான வகைப்படுத்த இயலாத பெரும் கதாபாத்திரமாக கர்ணன் படைக்கப் பட்டிருப்பது பாரதத்தின் சிறப்பு.

ஒருபுறம் தனது கவச குண்டலத்தையும் தானமளிக்கும் பெருமைக்குரிய கர்ணன்

மறுபுறம் குல மாதரசியை

சபையில் அவமானப் படுத்தும் சிறிய செயலையும் செய்கிறான்.

ஒருபக்கம் நண்பனுக்காக உயிரையும் கொடுக்க தயாராக இருக்கும் பேரன்பு கொண்டவனாய், மறுபக்கம் குருவிடமே பொய் கூறும் அவசர புத்தியும் கொண்டுள்ளான்.

அறச் செயல்களில் ஆர்வம் கொண்டு போரிடத் துடிக்கும் அதே சமயம் அதர்மவாதி களையும் அரவணைத்துக் கொள்கிறான்.

கர்ணன் நல்லவனா, கெட்டவனா என்பது பலருக்கும் புரியாத புதிர்.

பாண்டவர்களை போரில் சந்திக்கத் திறமையும் தைரியமும் இல்லாத துரியோ தனனுடன் இணைந்து, சகுனியின் உதவியுடன் நிகழ்ந்த சூதாட்டத்தில் கர்ணனின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

சகுனியின் வஞ்சகத்தினால் மாமன்னர் யுதிஷ்டிரர் தனது மனைவியான திரௌபதி உட்பட அனைத்தையும் இழந்தார்.

மாபெரும் சபையில் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாதரசி திரௌபதியைத் தர தரவென்று முடியைப் பிடித்து இழுத்து வந்த துச்சாதனனின் செயல் அனைவருக்கும் வேதனையைக் கொடுத்த போதிலும் கர்ணன் பெருமகிழ்ச்சியில் பொங்கினான். திரௌபதியைத் தன்னால் மணக்க முடிய வில்லை என்ற ஆதங்கமும் வெறியும் அவனது மனதில் நீண்ட காலமாக எரிந்து கொண்டிருந்தது, அதனால் புத்தி பேதலித்து திரௌபதியை அவமானப்படுத்த துணிந்தான்.

அச்சூழ்நிலையில் துரியோ தனனின் சகோதரர்களில் ஒருவனான விகர்ணன், திரௌபதிக்கு ஆதரவு தெரி வித்தும் சூதாட்டத்தினை எதிர்த்தும் பேசினான். அவனது பேச்சினால் கடும் கோபமுற்ற கர்ணன், விகர்ணனைக் கண்டித்து பெரும் சப்தத்துடன் குரல் எழுப்பினான். திரௌபதியை சபைக்கு அழைத்து வந்ததில் எந்த தவறும் இல்லை என்றும், திரௌபதி கற்பற்றவள் என்றும், உண்மையில் அவளை நிர்வாணமாக அழைத்து வந்திருக்க வேண்டும் என்றும் குரல் எழுப்பிய கர்ணன், அவளது உடையை முற்றிலுமாக அவிழ்த்து நிர்வாணமாக்கும்படி துச்சாதனனுக்கு கட்டளை யிட்டான்.

திரௌபதிக்கு நிகழ்ந்த அவமானத்தை சரிப்படுத்தும் நோக்கத்துடன் திருதராஷ்டிரர் இராஜ்ஜியத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

ஆனால் கர்ணனின் ஆலோ சனையின் பேரில் மீண்டும் சூதாட்டம் அரங்கேற்றப்பட்டு பாண்டவர்கள் காட்டிற்கு அனுப்பப்பட்டனர்.

பாண்டவர்கள் வன வாசத்தில் இருந்தபோது, தவம் நிறைந்த வாழ்வினால் அவர்களின் பலம் குன்றியிருக்கும் என்றும், இதுவே அவர்களை முற்றிலுமாக அழிப்பதற்கு உகந்த தருணம் என்றும் கர்ணன் அறிவுரை கூற, துரியோதனன் தனது நண்பர்கள் மற்றும் படைகளுடன் காட்டிற்குச் செல்ல முற்பட்டான்.

அர்ஜுனனைக் காட்டிலும் சிறந்த வீரனாக வர வேண்டும் என்று விரும்பிய கர்ணன், தன்னை ஒரு பிராமணன் என்று

கூறி பரசுராமரிடம் போர்க் கலையைக் கற்றான்.

பதினாறு வயது இளைஞனான அபிமன்யுவை கர்ணனின் தூண்டுதலின் பேரிலேயே ஆறு மகாரதிகள் (மாபெரும் போர் வீரர்கள்) இணைந்து, ஆயுதம் இல்லாத சூழ்நிலையில் போர் விதிகளை மீறிக் கொன்றனர். குருசேத்திரப் போரின் பதினேழாம் நாளில், அர்ஜுனனுக்கும் கர்ணனுக்கும் இடையில் கடும் போர் மூண்டது. சில சமயங்களில் அர்ஜுனனின் கரங்கள் உயர்ந்தும், வேறு சில சமயங்களில் கர்ணனின் கரங்கள் உயர்ந்தும் தோன்றியது. இருவருக்கும் இடையிலான போர் அவ்வளவு எளிதில் முடியக் கூடியது அல்ல என்று அனைவரும் எண்ணினர்.

தனது குரு பரசுராமரிடமிருந்து பெற்ற பார்கவ அஸ்திரத்தை கர்ணன் பிரயோகிக்க விரும்பினான், ஆனால் அதற்குரிய மந்திரங்களை அவனால் நினைவு கொள்ள முடியவில்லை. அச்சமயத்தில் அவனது ரதத்தின் சக்கரம் பூமிக்குள் புதைந்தது. கர்ணனின் தேரோட்டியாக இருந்த மன்னர் சல்லியன் அதனை வெளியில் எடுக்க கடும் முயற்சி செய்தபோதிலும் ரதத்தை வெளியே எடுக்க முடியவில்லை.

கர்ணன் தனது விதியை கடுமையாக திட்டத் தொடங்கினான்.

போரின் நடுவே சிறிய சந்தர்பம் கிடைத்தபோது, கர்ணன் தானாகவே சக்கரத்தை பூமியிலிருந்து உயர்த்த நினைத்தான். மொத்த பூமியும் குலுங்கியது, ஆனால் தேர் வெளியே வரவில்லை.

சக்கரத்தை வெளியில் எடுக்க முயற்சி செய்து கொண்டிருந்த கர்ணனைக் கொல்லும்படி கிருஷ்ணர் அர்ஜுனனுக்குக் கட்டளையிட்டார். அர்ஜுனன் அக்கட்டளையை நிறைவேற்ற தயாராவதைக் கண்ட கர்ணன் விரக்தி அடைந்தான். அர்ஜுனா, என்னைத் தாக்க வேண்டாம். ரதத்தில் இல்லாத என்னைத் தாக்குவதற்கு நீ ஒரு கோழையல்ல, போர்வீரனுக்கு உரிய கடமையுண்லோடு சில நிமிடங்கள் பொறுத்திருந்தால் போரைத் தொடங்கலாம் என்று முறையிட்டான்.

போரின் விதிமுறைகளையும் தர்மத்தையும் கடைபிடிக்குமாறு அர்ஜுனனை நோக்கி குரல் எழுப்பினான். அப்போது கர்ணனிடம் கிருஷ்ணர் பின்வரும் கேள்விகளை முன் வைத்தார்:

கர்ணா, தர்மத்தின் கொள்கைகளை பேசும் தகுதி உனக்கு இருக்கிறதா என்று கேள்வி மேல் கேள்விகளை கர்ணன் முன் வைக்கிறான்.

கதறக் கதற திரௌபதியை கவுரவ சபைக்கு அழைத்து

வந்தபோது உன்னுடைய தர்மம் எங்கே?

யுதிஷ்டிரரிடமிருந்து இராஜ் ஜியத்தைப் பறித்தபோது உன்னுடைய தர்மம் எங்கே?

பதிமூன்று வருட வன வாசத்திற்குப் பின் நாட்டை திருப்பிக் கேட்டபோது உன்னுடைய தர்மம் எங்கே?

வாரணாவதத்தில் அரக்கு மாளிகைக்கு தீ வைத்து பாண்டவர்களைக் கொல்ல முனைந்தபோது உன்னுடைய தர்மம் எங்கே?

மற்றொரு கணவனை ஏற்றுக்கொள்” என்று பெரும் சிரிப்புடன் திரௌபதியிடம் கூறியபோது உன்னுடைய தர்மம் எங்கே?

நீ விரும்பும் தர்மம்தான் திரௌபதியின் ஆடைகளை அவிழ்க்கும்படி துச்சாதனனுக்கு கட்டளையிட்டதா?

ஆறு மகாரதிகளுடன் இணைந்து 16 வயது அபிமன்யுவை சுற்றி வளைத்துக் கொன்றபோது உன்னுடைய தர்மம் எங்கே?

அப்போதெல்லாம் தர்மம் உனது மனதில் தோன்ற வில்லையா? அப்போதெல்லாம் தர்மத்தை நினைக்காமல், இப்போது தர்மத்தைக் கூப்பிடாதே.

நாங்கள் நீதிப்படி நடக்க வேண்டும் என்று நீ விரும்பலாம், ஆனால் இன்று போரில் வெற்றி பெற்று நீ உயிருடன் செல்ல இயலாது” என்றார்.

கிருஷ்ணரின் கூற்றில் இருந்த உண்மையை எண்ணி வெட்கத்தில் தலைகுனிந்தான் கர்ணன்.

அர்ச்சுனனிடம் தயக்கமின்றி கர்ணனைத் தாக்கும்படி கிருஷ்ணர் கட்டளையிட, கர்ணன் மீண்டும் ரதத்தில் ஏறி போர் புரியத் தொடங்கினான்.

கடும் போர் மூண்டது. தனது அம்புகளால் சில நிமிடங்கள் அர்ஜுனனை திகைக்க வைத்த கர்ணன், மீண்டும் ரதத்தின் சக்கரத்தை வெளியே எடுக்க கீழே இறங்கினான். கடும் பிரயத்தனம் செய்தான், சக்கரம் வெளியில் வரவே இல்லை. கோபத்தில் சீறினான் கர்ணன்.

அஞ்சலிகா என்னும் அஸ்திரத்தை வில்லில் பொருத்திய அர்ஜுனன் அதற்கு இந்திரனின் வஜ்ராயுதத்தின் சக்தியை அளித்தான். அர்ஜுனனின் தேரை கர்ணனுக்கு அருகில் கொண்டு வந்த கிருஷ்ணர், உடனடியாக இந்த அஸ்திரத்தை ஏவுவாயாக. கர்ணன் மீண்டும் இரதத்தில் ஏறுவதற்கு முன்பாக உனது எதிரியை வீழ்த்து,” என்று கட்டளையிட்டார்.

*நான் எப்போதும் பெரியோர்களை மதித்து, அவர்களின் அறிவுரைப்படி நடந்தேன் என்பது உண்மையாக இருந்தால், இந்த அஸ்திரம் கர்ணனைக் கொல்லட்டும்," என்று கூறியபடி அர்ஜுனன் அதனை ஏவினான். கர்ணனின் வலுவான அகல கழுத்தினைத் தாக்கிய அந்த அஸ்திரம், தலையை உடலிலிருந்து துண்டித்தது. கர்ணன் மரணம் எய்தினான்.*

*கர்ணனின் மரணத்தில் அர்ஜுனன் மட்டுமின்றி அவன் பெற்ற இரண்டு சாபங்களும் முக்கிய பங்காற்றின.*

*(1) பொய் சொல்லி தன்னிட மிருந்து கலையைக் கற்றுக் கொண்டான் கர்ணன் என்பதை பரசுராமர் கண்டறிந்தபோது, தெய்வீக அஸ்திரத்தை பிரயோகிப்பதற்கான மந்திரத்தை உனது வாழ்வின் மிக முக்கியமான காலக்கட்டத்தில் மறந்துவிடுவாய்," என்று சாபமிட்டார். அந்த சாபத்தினா லேயே அர்ஜுனனுடனான போரில் கர்ணனால் மந்திரங்களை நினைவிற்கு கொண்டு வர இயலவில்லை.*

*(2) ஒருமுறை பரசுராமரின் ஆஸ்ரமத்திற்கு அருகில் வில் வித்தையை பயிற்சி செய்துவந்த கர்ணன் ஒரு பசுவினை தனது அம்பினால் அறியாமல் கொன்றுவிட்டான். அப்பசு ஓர் ஏழை பிராமணரின் ஒரே சொத்தாக இருந்துவந்தது. அதனால் கோபம் கொண்ட பிராமணர், இந்த அப்பாவி பசு உதவியின்றி உன்னிடம் மாட்டிக் கொண்டதைப் போலவே, உனது வாழ்வின் முக்கியமான தருணத்தில் உனது தேரின் சக்கரம் பூமியினுள் புதைந்து நீயும் உதவியற்றவனாக தவிப்பாய்" என்று சாபம் கொடுத்தார். அந்த சாபமே கர்ணனின் தேர் சக்கரம் பூமியில் சிக்கிக் கொள்வதற்கு காரணமாக அமைந்தது.*

*சக்தி வாய்ந்த எதிரிகளை வீழ்த்துவதற்கு சில நேரங்களில் தந்திரங்கள் அவசியமாகின்றன.*

*குறிப்பாக எதிரிகள் தந்திரத் துடன் செயல்படும்போது அதனை முறியடிக்க நாமும் தந்திரமாக செயல்பட வேண்டும் என்பதே மகாபாரதம் காட்டும் கொள்கை.*

Owned Published and Printed by P. Sangamithira Published from 43/13, Paddy field Road, Perambur, Chennai - 600 011. Printed at I.M. Process, 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai - 600 014. Editor : Dr. M. Pattazhagan